(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 7 (3).]

# பாராளுமன்றம்

## 7 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2017 செப்தெம்பர் 22 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2017 ஒக்தோபர் 03, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*
மாகாண சபை தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*
நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## 2017 ஒக்தோபர் 09, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

124/ '15

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நகர்ப்புறங்களில் பெரும் எண்ணிக்கையான பிச்சைக்காரர்கள் இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இவர்களில் சிலர் பல்வேறு சட்டவிரோத செயல்களில் தொடர்புபட்டுள்ளனர் என்பதையும்;

(iii) சிலர் பிச்சைக்கார வேடம் தரித்த மோசடிக்காரர்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் இருக்கும் பிச்சைக்காரர்கள் பற்றிய தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்; ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி தொகை மதிப்பீட்டிற்கு அமைவாக இலங்கையில் இருக்கும் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இவ்வெண்ணிக்கை பெண்கள், ஆண்கள் மற்றும் சிறுவர் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) பிச்சைக்காரர்கள் பற்றி தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லையெனில் தொகை மதிப்பீட்டை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) பிச்சைக்காரர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள வழிமுறைகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கையில் உள்ள பிச்சைக்காரர்களுக்கான புனர்வாழ்வளிப்பு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனர்வாழ்வளிப்பு பணிகளுக்கு வருடமொன்றுக்கு அரசாங்கம் செலவிடும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1217/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் அழிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அழிவடைந்துள்ள மேற்படி சொத்துகள் பற்றி அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சொத்துக்களின் மொத்த பெறுமதி யாதென்பதையும்;

(v) அழிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்து தொடர்பாகவும் பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி (i) - (vi) வரை விசாரிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1294/ '16

கௌரவ டலஸ் அழகப்பெரும,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) சட்ட ரீதியிலான உரிமையின்றி மாத்தறை மாவட்டத்தில் இற்றைவரை அரச காணிகளில் வசிக்கும் அல்லது பயிர் செய்கை மேற்கொள்ளும் ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கையில் எத்தனைபேருக்கு காணி உறுதிகள் அல்லது உரிமப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மாத்தறை மாவட்டத்தில் அரச காணிகளுக்கு வழங்கப்பட்டுள்ள உறுதிகள் அல்லது உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) மேலே (v) இல் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1385/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 145 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம் மீனவ மக்களின் பாதுகாப்பினை நோக்கமாகக் கொண்டு, கடலில் ஏற்படும் விபத்துக்களுக்கு ரூபா ஒரு மில்லியன் ஆயுட் காப்புறுதித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த காப்புறுதிக் காப்பீட்டை பெற்றுக்கொடுக்கும் நிறுவனம் மற்றும் அதன் பொருட்டு செலுத்தப்படும் காப்புறுதித் தவணைத் தொகைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி காப்புறுதித் திட்டத்தின் மூலம் இழப்பீடு செய்யப்பட்ட அளவு யாதென்பதையும்;

(iv) குறித்த காப்புறுதித் திட்டத்தின் பிரகாரம் ஆயுட் காப்புறுதிக் காப்பீட்டை பெற்ற மீனவர்களின் பெயர்ப் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1470/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் ஆரம்ப நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட திகதி தொடக்கம் இறுதி பணிப்பாளர் சபை வரை அதன் பணிப்பாளர் சபையிலிருந்த ஆட்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் பெற்றுள்ள சம்பளங்கள் மற்றும் ஏனைய அனுகூலங்கள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி ஆரம்பம் தொடக்கம் அடைந்துள்ள நட்டமானது வருடாந்தம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியானது கடன் பெற்றுள்ள மற்றும் கடன் செலுத்தவுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் அக்கடன் தொகைகள் யாவை என்பதையும்;

(vi) மிஹின் லங்கா விமான சேவையின் எதிர்காலம் தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1623/ '17

கௌரவ ஹேஷான் வித்தானகே,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) செவனகல சீனித் தொழிற்சாலை கடந்த 10 ஆண்டுகளில் பெற்றுள்ள இலாபம் அல்லது நட்டம் வருட வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது மேற்படி தொழிற்சாலையில் கடமையாற்றுகின்ற நிரந்தர மற்றும் அமய பணியாட்டொகுதியினர் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தொழிற்சாலையின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய கடந்த சில ஆண்டுகளில் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தொழிற்சாலையிலிருந்து இதை விட அதிகமான உற்பத்தியை அடையப்பெறுவதற்காக தகைமைமிக்க உரிய முகாமைத்துவமொன்றின் தேவையை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ள உத்தேசித்துள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1709/'17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தேயிலை – உர மானியம் வழங்கப்பட்டுள்ள பிரதேசங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) நாட்டில் சகல சிறிய தேயிலை பயிர்ச் செய்கையாளர்களுக்கும் தேயிலை - உர மானியம் வழங்கத் தேவையான பணத்தொகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் தேயிலை – உர மானியத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் தேயிலை – உர மானியம் வழங்கப்பட்டுள்ள மற்றும் இதுவரை வழங்கப்படாதுள்ள சிறிய தேயிலைக் காணிச் சொந்தக்காரர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(ii) இலங்கையிலுள்ள தேயிலை – உர மானியம் பெறுவதற்கு தகுதிபெற்றுள்ள சிறிய தேயிலை காணிச் சொந்தக்காரர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இவர்களில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தேயிலை – உர மானியம் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1725/ '17

கௌரவ கனக ஹேரத்,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013ஆம் ஆண்டு தொடக்கம் 2016ஆம் ஆண்டு வரை,

(i) இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவின் அளவு;

(ii) அதற்கென செலுத்தப்பட்ட பணத்தொகை;

(iii) இலங்கையில் தலா கோதுமை மா நுகர்வு;

ஒவ்வோராண்டு வாரியாக, தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இந்நாட்டுக்கு கோதுமை மா இறக்குமதி செய்யப்படுவதை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அரசாங்கம் இன்றளவில் கோதுமை மா இறக்குமதியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1751/ '17

கௌரவ லக்கி ஜயவர்தன,— பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு முழுவதிலும் தற்போது நடாத்தப்பட்டு வருகின்ற சினிமாக் கொட்டகைகள் யாவை;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் வெவ்வேறாக யாவை;

(iii) இச்சினிமா கொட்டகைகளின் உரிமையாளர்கள் மற்றும் அவை ஆரம்பிக்கப்பட்டுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) நாடு முழுவதிலும் அமைந்துள்ள சினிமாக் கொட்டகைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அது எவ்வாறு;

(iii) இச்சினிமா கொட்டகைகளை ஒழுங்குமுறைப்படுத்துவது யார்;

(iv) மிகக்குறைந்த வசதிகளுடனும் பலவீனமான செயற்பாட்டுடனும் கூடியதாக நடாத்தப்பட்டு வரும் சினிமாக் கொட்டகைகள் காணப்படுகின்றன என்பதை அறிவாரா;

(v) ஆமெனில், சினிமாக் கொட்டகைகளை முறைசார்ந்ததாக நடாத்திச் செல்வதற்காக, சினிமாக் கொட்டகைகளை ஒழுங்குமுறைப் படுத்தப்படுவதற்கு முறைசார்ந்த முறையியலொன்றை துரிதமாக அமைப்பாரா;

(vi) ஆமெனில் , அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1788/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990.12.31 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த காலகட்டத்தில் வடக்கு மாகாணம் மன்னார் மாவட்டத்தில் மத்திய அமைச்சு மற்றும் மாகாணசபையின்கீழ் இயங்கிக்கொண்டிருந்த தமிழ் மொழிமூல முஸ்லிம் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் அவை அமைந்திருந்த இடங்கள் யாவை;

(iii) அப்பாடசாலைகள் உள்ளடங்குகின்ற கல்வி வலயங்கள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு பாடசாலையும் அரசாங்கப் பாடசாலையாக பிரகடனஞ் செய்யப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கங்கள் மற்றும் திகதிகளை சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1798/ '17

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சராசரியாக வருடாந்தம் இடம்பெறும் குற்றச் செயல்களில் உள்ளடங்கும் சம்பவங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) குற்றவியல் வழக்குகளின் போது நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் குற்றவாளிகளாகத் தீர்மானிக்கப்படுபவர்களின் சதவீதம் என்னவென்பதையும்;

(iii) அந்தப் பெறுமானம் ஆசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது விகிதாசாரப்படி அதிக பெறுமானத்தைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது சம்பந்தமாக அரசு பிரயோகிக்கும் வழிமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1812/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை - பெலிஅத்த புகையிரத வீதியின் சமிக்ஞை முறைமையை பொருத்துவதற்காக செலவாகும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை மேற்கொள்ளும் கம்பனி யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனின், அதற்காக முன்வந்த கம்பனிகள் மற்றும் முன்வைக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்திற்கான நிதியைப் பெற்றுக்கொள்ளும் முறை யாது என்பதையும்;

(vi) மேற்படி சமிக்ஞைகளைப் பொருத்துவதற்காக புகையிரதத் திணைக்களத்தால் விலைகள் முன்வைக்கப்பட்டிருந்தனவா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1815/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தசாசன அமைச்சு மற்றும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் விஹாரைகளுக்கு நிதி வழங்கும் செயற்பாடொன்று உள்ளதென்பதையும்;

(ii) அவ்வாறு நிதி வழங்குகையில் தெரிவு செய்யப்பட்ட விஹாரைகளுக்கு மாத்திரம் நிதி வழங்கப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வாறு விஹாரைகளுக்கு நிதி வழங்கும் செயற்பாடொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக இச் சபையில் தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1865/ '17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மீதொட்டமுல்லைக்கு மேலதிகமாக, உள்ளூராட்சி மன்றங்களினால் அகற்றப்பட்டு தற்போது உருவாகியுள்ள குப்பை மேடுகள் யாவை என்பதையும்;

(ii) அவை உரித்தான உள்ளூராட்சி மன்றங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது மேற்படி குப்பை மேடுகளில் காணப்படுகின்ற குப்பைகளின் அளவு யாது என்பதையும்;

(iv) இவற்றில் தற்போது ஆபத்தான நிலையில் காணப்படுகின்ற குப்பை மேடுகள் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வாறான குப்பை மேடுகளுக்கு மென்மேலும் குப்பைகளை அகற்றி அவை வளர்ச்சியடைவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்காக உள்ளூராட்சி அமைச்சின் கீழ் ஏதேனுமொரு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(v) தற்போது ஏதேனும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பின், அதன் முன்னேற்றம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1869/ '17

கௌரவ நாமல் ராஜபக்ஷ,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.02.26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிதிக் குற்றவியல் புலனாய்வுப் பிரிவில் (F.C.I.D) சேவையில் ஈடுபட்டுள்ள மொத்த பதவியணி யாதென்பதையும்;

(ii) அதிலுள்ள பதவிநிலை தரத்திற்கான பதவிகள் யாவையென்பதையும்;

(iii) அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர்கள், முகவரிகள், கொடுப்பனவுகள் மற்றும் மேலதிகமாக செலுத்தப்படும் விசேட கொடுப்பனவுகள் உள்ளிட்ட மொத்த சம்பளத்தை தனித்தனியாகக் கொண்ட ஆவணமொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015.02.26 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை விசாரணை நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு விஜயங்களில் பங்கேற்கச் செய்யப்பட்ட மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, அவர்கள் விஜயங்களை மேற்கொண்ட வெளிநாடுகளின் எண்ணிக்கை, வெளிநாடுகள் மற்றும் அவ்விஜயங்களுக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதற்காக பங்கேற்ற உத்தியோகத்தர்களின் பெயர்கள், முகவரி, விஜயம் மேற்கொள்ளப்பட்ட வெளிநாடு மற்றும் மேற்படி விஜயங்களுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக உள்ளடங்கிய ஆவணமொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2017 நவம்பர் 10, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

157/ '15

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான வனாந்தரக் காணிகளின் பரப்பளவு எவ்வளவு;

(ii) இவ்வனாந்தரங்களின் பெயர்கள் யாவை;

(iii) ஒவ்வொரு வனாந்தரத்தினதும் பரப்பளவு ஏக்கர்களில் வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட வனாந்தரங்களின் எல்லைகள் அடையாளமிடப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், இவ்வெல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்ட திகதி யாது;

(iii) இன்றேல், எல்லைகளை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேலே அ (ii) இல் குறிப்பிடப்பட்ட வனாந்தரங்களினுள் தற்போது வீடுகள், சுற்றுலாக் கைத்தொழிலுடன் தொடர்புடைய ஹோட்டல்கள் அல்லது வேறு நிர்மாணிப்புகள் உள்ளனவா;

(ii) ஆமெனில், மேற்படி நிர்மாணிப்புகள் காரணமாக வனாந்தரத்துக்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1223/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் அழிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அழிவடைந்துள்ள மேற்படி சொத்துகள் பற்றி அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சொத்துகளின் மொத்த பெறுமதி யாதென்பதையும்;

(v) அழிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்து தொடர்பாகவும் பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி (i) - (vi) வரை வினவப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1387/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டப் பிரேரணை இலக்கம் 142 இற்கு ஏற்ப, பால் உற்பத்திக்குத் தேவையான இயந்திர சாதனங்களை ஒரே தடவையில் தேய்மானம் அளிப்பதற்கான கொடுப்பனவினை பெற்றுக்கொண்ட தரப்பினர்கள் யார்;

(ii) ஒரே தடவையிலான தேய்மானக் கொடுப்பனவாக, மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் பெற்றுக்கொண்ட பண ரீதியான நன்மைகளின் அளவு யாது;

(iii) உள்நாட்டு பால் உற்பத்தியின் வளர்ச்சிக்குத் தேவையான இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்கையில், 2015 சனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் மற்றும் 2015 சனவரி 01ஆம் திகதிக்குப் பின்னர் வழங்கப்பட்ட இறக்குமதி வரிக் குறைப்புகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1475/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் இலவச பேருந்து பயண அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ள அரச அலுவலர்கள் மற்றும் பிற ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்கள் பணியாற்றும் நிறுவனங்கள் மற்றும் வதியும் மாவட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு அரச நிறுவனத்தாலும் இதற்கென இலங்கை போக்குவரத்துச் சபைக்கு மாதாந்தம் செலுத்தும் தொகை ஒவ்வொரு நிறுவனத்தின்படி தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேற்படி இலவச பயண அனுமதிச்சீட்டுக்கள் பயன்படுத்தப்படும் பயண வழிக்கு ஏற்புடையதாக பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்தியுள்ள டிப்போக்களுக்கு குறித்த பணத்தை நேரடியாக வழங்கக்கூடிய வழிமுறையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) இ.போ.ச. பஸ் வண்டிகளைத் தரித்து வைத்தல், ஓட்டத்தில் ஈடுபடுத்தல் மற்றும் ஏனைய பணியாளர்களின் பிரச்சினைகளின் போது இலங்கை போக்குவரத்துச் சபை மௌனம் காக்கும் கொள்கையை பின்பற்றுவதை அறிவாரா என்பதையும்;

(vi) இ.போ.ச. பணியாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் பங்களிப்பை அதிகளவில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1507/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் அரசாங்கம் பெற்றுக்கொண்ட மொத்தக் கடன்களின் பெறுமதி யாது;

(ii) 2016 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட கடன்களுக்காக செலுத்த வேண்டிய நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதம் யாது;

(iii) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கு ஒப்பீட்டளவில், 2016 ஆம் ஆண்டில் நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதம் மாற்றமடைந்துள்ள பெறுமதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1544/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுரத்தில் வசிக்கும், மூன்று பிள்ளைகளின் தாயான சுஜானி என்ற பெண் குவைட் நாட்டில் சேவையாற்றிய சமயம் மிக கொடூரமான முறையில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளாரென்பதையும்;

(ii) மேற்படி கொடூர சித்திரவதை காரணமாக முண்ணான் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, இவர் தற்சமயம் குவைட்டிலுள்ள அடான் வைத்தியசாலையில் 17 ஆம் வாட்டில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) முண்ணான் பாதிக்கப்பட்டமையால் முடங்கிய நிலையில் உள்ள இப்பெண் உடனடியாக இலங்கைக்கு அழைத்து வரப்படுதல் வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இவருக்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையுடன் உடனடியாக இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1782/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) 1990 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததொரு காலத்தில் வட மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ் காதி நீதிபதிகளாக நியமிக்கப்பட்டிருந்தவர்கள் யாவரென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி காதி நீதிமன்ற வலயத்தில் உள்ளடங்குகின்ற கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி காதி நீதிமன்ற வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கங்கள் மற்றும் திகதிகள் யாவையென்பதையும்; அவற்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1858/ '17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் மாநகர திட்டத்தின் (Megapolis Plan) கீழ் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னோக்கியுள்ள 03 ஆண்டுகள் வரையில் மஹரகம பிரதேச செயலாளர் பிரிவிற்காக திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்கனவே ஏதேனும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயின், அவை யாவை என்பதையும்;

(iii) ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டவட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

(iv) இதற்கென அரச மற்றும் தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனின், அம்முதலீடுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது ஆரம்பிக்க எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக கடன் தொகைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனின், கடன் பெற்றுக்கொள்ளப்படும் நிறுவனங்கள் மற்றும் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1877/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் "கங்கே வாடிய" என்ற பெயரில் கிராமம் ஒன்று இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்தக் கிராமத்தில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அந்தக் கிராமத்தில் வாழும் மீனவர்வர்கள் மீன் அறுவடை குறைந்திருப்பதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதை அவர் அறிவாரான என்பதையும்;

(iv) ஆமெனில், அந்தக் கிராமத்து மக்களுக்கு ஏதேனும் நிவாரணம் வழங்க அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1878/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016.04.01ஆம் திகதி தொடக்கம் 2017.05.31 ஆம் திகதி வரை கமத்தொழில் அமைச்சு பேணிவந்துள்ள கட்டடங்களின் மொத்த மின் கட்டணம் எவ்வளவு என்பதையும்;

(ii) அக்காலப்பகுதியில் ராஜகிரியவில் அமைந்துள்ள கமத்தொழில் அமைச்சினால் குத்தகைக்குப் பெறப்பட்ட டி.பீ. ஜயசிங்ஹ கட்டடத்தின் மொத்த மின் கட்டணம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1955/ '17

கௌரவ கனக ஹேரத்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கிராம அலுவலர்களின் கடமைகளை இலகுவாக்குவதற்காக வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட கணினிகளை வழங்குதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) தற்போது கிராம அலுவலர்களுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ள மாவட்டங்கள் மற்றும் வழங்கப்பட்டுள்ள கணினிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இதுவரை கிராம அலுவலர்களுக்கு கணினிகள் வழங்கப்படாதுள்ள மாவட்டங்கள் மற்றும் வழங்கப்படவுள்ள கணினிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கணினிகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிராம அலுவலர்களின் அலுவலகங்கள் பேணிவரப்படுகின்ற கட்டிடங்களுக்கான வாடகையாக அரசாங்கத்தினால் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவு கிராமிய மற்றும் நகர பிரதேசங்களுக்கமைவாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) செலுத்தப்படுகின்ற இக்கொடுப்பனவு காலத்துக்கேற்றவாறு போதுமானதாக அமைகின்றதா என்பதையும்;

(iii) போதுமானதாக இல்லாவிடின் இக்கொடுப்பனவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1978/ '17

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன,— நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகின் முதலாவது பௌத்த தாதுகோபுரமாக கருதப்படுகின்ற கிரிஹண்டு சேய புனித தலம் ஆயிரக்கணக்கான மக்கள் வருகை தரும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததொரு புனித தலமாகும் என்பதையும்;

(ii) மேற்படி வணக்கஸ்தலத்தில் வசிக்கும் தேரர்களுக்கு மற்றும் இவ்விடத்தை பார்வையிட வருகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு போதியளவு நீர் வசதிகள் இங்கு இல்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கிரிஹண்டு சேய புனித தலத்தின் நீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) புனித தலத்திலுள்ள குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக அப்புனித தலத்தில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் பேணிவரப்படும் சில நீர் பவுசர்களை தினந்தோறும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறு பவுசர் மூலம் வழங்கப்படும் நீரை உரிய முறையில் களஞ்சியப்படுத்தி குழாய்கள் மூலம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1981/ '17

கௌரவ (திருமதி) ரோஹிணீ குமாரி விஜேரத்ன,— நீர்ப்பாசன மற்றும் நீர் வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) மகாவலி "சுரக்சிததா" முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் வயம்ப கால்வாய் கருத்திட்டத்தின் பிரதான கால்வாய் செல்லும் தம்புள்ளை, கலேவல பிரதேச செயலாளர் பிரிவுகளில் 20 கி.மீ. நீளமான கால்வாய்க்கு கீழாக அமைந்துள்ள தற்சமயம் மழைநீரால் மாத்திரம் வளமூட்டப்படும் சிறு குளங்கள், அணைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி குளங்கள், அணைகள் முறைமை அனைத்தையும் வளமூட்டுவதற்கு வயம்ப கால்வாய் ஊடாக நீர்ப்பாசன நீர் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) இதற்காக தற்சமயம் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட குளங்களில் வயம்ப கால்வாய் கருத்திட்டத்தினால் நீர் வழங்கப்படும் மற்றும் நீர் வழங்கப்படாத குளங்களின் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) பிரதானமான கால்வாய்க்கு கீழாக உள்ள குளங்கள் அணைகளை வளமூட்டாது, வடமேல் மாகாணத்திற்கு நீரை வழங்குதல் தம்புள்ளை, கலேவல விவசாயிகளுக்கு இழைக்கப்படும் அநீதியாக அமையாதா என்பதையும்;

(vi) இதற்குத் தீர்வாக நீர் வழங்கப்படாத குளங்களுக்கு நீரை வழங்குவதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்;

(vii) ஆமெனின், எத்திகதியில் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1988/ '17

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்வேறுபட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் குறைந்த வெட்டுப் புள்ளிகளைக் கொண்ட மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் சேர்ந்து பிற மாவட்டங்களில் அமைந்துள்ள உயர் தரத்திலான கல்வி நிலையங்களில் கல்வி பயின்று க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்கு தாம் சேர்ந்துள்ள பாடசாலைகளின் மூலம் தோற்றி குறிப்பிட்ட மாவட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக அனுமதிக்குரிய இட ஒதுக்கீட்டில் (Quota) சேர்ந்துகொள்கின்றனர் என்பதையும்;

(ii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தின் காரணமாக குறைந்த வெட்டுப்புள்ளிகளைக் கொண்ட மாவட்டங்களில் வாழ்ந்து அங்கேயே கல்வி பயிலும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கான இட ஒதுக்கீட்டில் அனுமதிக்கான வாய்ப்பு இழக்கப்படுவதன் மூலம் இவர்கள் உள ரீதியாக பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

(iii) பல்கலைக்கழக அனுமதியின்போது மாவட்ட மட்டத்தில் மாணவர்களை தரப்படுத்தும் அடிப்படையில் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக்கொண்டதன் பின்னர், அந்த வரிசைக்கிரமத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பாகவும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், இவ்வாறு குறைந்த வெட்டுப்புள்ளிகளைக் கொண்ட மாவட்டங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் மனநிலையைக் கருத்திற்கொண்டு பிற மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களின் வருகையைத் தடுப்பதற்கும், அவ்வாறு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் பாடசாலைகளுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1990/ '17

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தின் மக்கள்தொகை மற்றும் புவியியல் நிலை ஆகிய காரணிகளைக் கருத்திற்கொண்டு பிரதேச செயலகங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான பிரேரணை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவ்வெண்ணிக்கையை ஐந்து தொடக்கம் பத்து வரை அதிகரிப்பதற்கு அமைச்சர் வாக்குறுதியளித்தார் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அச்செயன்முறையின் இன்றைய நிலைமை யாதென்பதையும்;

(iii) அதனை நடைமுறைப்படுத்துவதில் ஏதேனும் சவால்கள் உள்ளனவா என்பதையும்;

(iv) அப்பிரேரணை நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2017 நவம்பர் 11, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

544/ '16

கௌரவ புத்திக பத்திரண,— கிராமிய பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முடிவடையும்போது இலங்கையில் எருமைப் பால் உற்பத்தியினை தமது வாழ்வாதாரமாகக் கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டில் இலங்கையில் எருமைப் பால் உற்பத்தியானது எத்தனை லீற்றர்கள் என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டின் முடிவில் இலங்கையில் காணப்பட்ட எருமை மாடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எருமைப்பால் சார்ந்த கைத்தொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்கு அக்கைத்தொழிலை முன்னேற்றுவதற்குத் தேவையான வசதிகள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வசதிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) எருமை மாடுகளின் தொகையை அதிகரிக்கச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் அந்நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1224/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் அழிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அழிவடைந்துள்ள மேற்படி சொத்துகள் பற்றி அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சொத்துகளின் மொத்த பெறுமதி யாதென்பதையும்;

(v) அழிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்து தொடர்பாகவும் பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி (i) - (vi) வரை விசாரிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1401/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 வரவு செலவு திட்டத்தின் 173 ஆம் முன்மொழிவின் பிரகாரம், கிராமிய கமத்தொழிலுக்கு உதவும் வகையில், சிறு குளங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2000 மில்லியன் நிதி ஏற்பாட்டின் ஊடாக 2016 ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்ட சிறு குளங்கள் மற்றும் கால்வாய்கள் மற்றும் இதற்கென ஏற்கப்பட்ட செலவினம் உள்ளடங்கிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், ஏன் என்பதையும்;

(iii) சிறு குளங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைத்தல் பற்றிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட அமைச்சு மற்றும் இவ்வமைச்சுக்கு 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியினால் விடுவிக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) ரூபா 2000 மில்லியன் பெறுமதியான இப்பாரிய கருத்திட்டத்தை மேற்பார்வை செய்வதற்கு பல்வேறு மட்டத்தில் பங்களிப்புச் செய்த நிறுவனங்கள் அல்லது அமைப்புக்கள் யாவை என்பதையும்;

(v) கருத்திட்டத்தின் மேற்பார்வைப் பணிக்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1476/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இலங்கையில் இயங்கும் தனியார் மின்னுற்பத்தி கம்பனிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கம்பனிகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்படி ஒவ்வொரு கம்பனியினாலும் இலங்கை மின்சார சபைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட மின்சார அலகுகளின் எண்ணிக்கை மற்றும் மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் இலங்கை மின்சார சபையினால் செலுத்தப்பட்ட பணத் தொகை, ஒவ்வொரு ஆண்டு அடிப்படையில் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் இலங்கை மின்சார சபையினூடாக மேற்கொள்ளப்படும் மின்னுற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1578/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டின் மொத்த வரிகளில் 57% இலங்கை சுங்கத்தினால் அறவிடப்படுகின்றதென்பதையும்;

(ii) இதில் அதிக வரி வீதம் வாகன இறக்குமதி வரியாகும் என்பதையும்;

(iii) வரி செலுத்தாமலிருப்பதற்கு வாகன இறக்குமதியாளர்கள் பலவித உபாயங்களை பயன்படுத்துகின்றனர் என்பதையும்;

(iv) ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களுக்கு மேலதிகமாக, 2015.02.10 ஆம் திகதிய 1901/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினூடாகவும், இந்நிலைமையைத் தவிர்ப்பதற்கான கட்டளைகள் விதிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) எவ்வாறாயினும், 2015.09.22 ஆம் திகதிய 1933/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தீய வர்த்தகர்களுக்கு விரும்பியவாறு நடந்துகொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அ (iv) இல் குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பேரில் சுங்க அதிகாரிகளினால் வெளிப்படுத்தப்பட்ட விலை குறைவாகக் குறிப்பிடப்பட்ட 1000 வாகனங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டால், ரூபா 8000/- மில்லியனுக்கு அதிகமான வருமானத்தை அறவிடமுடியும் என்பதையும்;

(iii) சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளையின் பிரகாரம் 2016.09.21 ஆம் திகதி அனைத்து சுங்கப் பரிசோதனைகளையும் தற்காலிகமாக இடைநிறுத்தி தற்போது 04 மாதங்கள் கழிந்துள்ளதால் நாடு பெருந்தொகையான வருமானத்தை இழந்துள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், அ (iv) இல் குறிப்பிடப்பட்ட கட்டளையை செல்லுபடியற்றதாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1783/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 1990 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததொரு காலத்தில் வட மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ் காதி நீதிபதிகளாக நியமிக்கப்பட்டிருந்தவர்கள் யாவரென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி காதி நீதிமன்ற வலயத்தில் உள்ளடங்குகின்ற கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி காதி நீதிமன்ற வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் மற்றும் திகதிகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1859/ ’17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் மாநகர திட்டத்தின் (Megapolis Plan) கீழ் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னோக்கியுள்ள 03 ஆண்டுகள் வரையில் மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவிற்காக திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்கனவே ஏதேனும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயின், அவை யாவை என்பதையும்;

(iii) ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டவட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

(iv) இதற்கென அரச மற்றும் தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனின், அம்முதலீடுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது ஆரம்பிக்க எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக கடன் தொகைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனின், கடன் பெற்றுக்கொள்ளப்படும் நிறுவனங்கள் மற்றும் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1879/ ’17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.08 ஆம் திகதியிலிருந்து இன்று வரை அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கென வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் யாவை என்பதையும்;

(ii) ஒவ்வொரு வாகனத்தினதும் வகை மற்றும் விலை யாது என்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்கென செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1979/ '17

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் திரியாய பிரதேசத்தில் அமைந்துள்ள கிரிஹண்டு சேய புனித ஸ்தலத்துக்குரிய காணிகள் நில அளவை செய்யப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அளவைசெய்யப்பட்டு இனங்காணப்பட்டுள்ள நிலத்தின் மீது அடையாளம் இடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அளவைசெய்யப்பட்டதன் மூலம் இனங்காணப்பட்டுள்ள புனித ஸ்தலத்திற்குரிய காணியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iv) குறிப்பிட்ட வரைப்படங்களை புத்த சாசன அமைச்சுக்கு வழங்குவதில் தாமதம் ஏற்படக் காரணம் என்னவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1989/ '17

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) இலக்கம் 11, புகையிரத வீதி, மன்னார் எனும் முகவரியில் அமைந்துள்ள (உறுதி இலக்கம் 16) 190 பேச்சஸ் அளவினைக் கொண்ட காணித் துண்டானது 1872.12.17 ஆம் திகதி மன்னார் காணிக் காரியாலத்தினால் மெதடிஸ்ட் திருச்சபைக்குரிய காணியாக பதிவு செய்யப்பட்டுள்ளதென்பதையும் (பதிவிலக்கம் B 1/53);

(ii) 1985 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக குறிப்பிட்ட காணியைப் பராமரிக்க முடியாமல்போன சந்தர்ப்பத்தில் இலங்கை இராணுவம் குறிப்பிட்ட காணியில் அலுவலகமொன்றை தாபித்துள்ளதென்பதையும்;

(iii) மேற்படி அலுவலகத்திற்காக மன்னார் நகருக்கு அருகாமையில் காணித் துண்டொன்று ஒதுக்கப்பட்டு 3 வருடங்களுக்கு மேலாகியும் மெதடிஸ்ட் திருச்சபைக்குச் சொந்தமான குறித்த காணியானது இதுவரையில் இராணுவத்தினரால் விடுவிக்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) தற்போது மெதடிஸ்ட் திருச்சபைக்கு பெரிதும் தேவைப்பட்டுள்ள மேற்படி காணியை துரிதமாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1991/ '17

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) பெருந்தோட்டங்கள் அமைந்துள்ள பிரதேசங்களிலுள்ள பிரதேச சபைகளுக்கு தமது சேவைகளை நிறைவேற்ற முடியாதவாறு பிரதேச சபைச் சட்ட ஏற்பாடுகள் அமைந்துள்ளன என்பதையும்;

(ii) அவற்றைத் திருத்துவதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) இதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சட்ட ஏற்பாடுகளுக்கான திருத்தங்களின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) அத்திருத்தங்களை மேற்கொள்வதில் ஏதேனும் தடைகள் உள்ளனவா என்பதையும்;

(iii) குறித்த சட்டத் திருத்தங்கள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1994/ '17

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி, போதனா வைத்தியசாலைக்குரிய மொத்தக் காணியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) அந்தப் பரப்பளவில் தற்போது வைத்தியசாலையினால் பயன்படுத்தப்படும் காணியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) வைத்தியசாலைக்குரிய காணியில் பெருமளவு நிப்பகுதி அனுமதியின்றி பயன்படுத்தப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) அந்த நிலைமை வைத்தியசாலையின் நடவடிக்கைகளுக்கு தடையாகவிருப்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நிலைமையை கட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1995/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை சனாதிபதியினால் சனாதிபதிச் சட்டத்தரணிகளாக பெயரிடப்பட்ட ஆட்களின் பெயர்ப்பட்டியலை ஒவ்வொரு வருடங்களுக்கமைய வெவ்வேறாக சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) சனாதிபதிச் சட்டத்தரணிக்குப் பெயரிடப்படும் போது பின்பற்றப்படும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2073/ '17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் வவுனியா, நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவின், மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, புதுவிளாங்குளம், புட்குளம், குஞ்சுகுளம், மன்னகுளம், கொல்லர் புளியங்குளம் ஆகிய 05 கிராமங்களில் சுமார் 270 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டார்கள் என்பதையும்;

(ii) இக் கிராமங்கள் முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ளன என்பதையும்;

(iii) மீள்குடியேற்றப்பட்ட காலத்திலிருந்து இதுவரைக்கும் இம் மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி கடும் சிரமத்தை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

(iv) A-9 வீதிக்கு பிரவேசிப்பதற்கான பாதைகள் இல்லாமை மற்றும் கிராமங்களுக்கு ஊடாக அமைந்துள்ள புகையிரதப் பாதைக்கு குறுக்காகச் செல்கின்ற வீதிகளுக்கு பாதுகாப்பான புகையிரதக் கடவைகள் இல்லாத காரணத்தினால் இம் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2118/ '17

கௌரவ ஜயந்த சமரவீர,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ (i) 2017.05.27 ஆந் திகதியன்று ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களினால் களுத்துறை மாவட்டத்தில் உயிரிழந்த மற்றும் காணாமல்போன ஆட்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக உயிரிழந்த ஆட்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி அனர்த்தத்தினால் உயிரிழந்த மற்றும் காணாமல்போன ஆட்களின்,

(i) பெயர், முகவரி, வயது, தொழில் மற்றும் ஆண்/பெண் பால்நிலை;

(ii) கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு;

(iii) நெருங்கிய உறவினரின் பெயர் மற்றும் முகவரி;

யாவை என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அவ்வாறு உயிரிழந்த அல்லது காணாமல்போன ஆட்களுக்காக இன்றளவில் இழப்பீடு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் பெயர்களும் செலுத்தப்பட்ட பணத் தொகையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இழப்பீடுகள் செலுத்தி முடிக்கப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2017 நவம்பர் 16, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

589/ '16

கௌரவ புத்திக்க பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வன ஒதுக்கங்களினுள் கொண்டுநடாத்தப்படும் ஹோட்டல் தொழில்களுடன் தொடர்புடைய தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தொழில்முயற்சிகளுக்கு வன பரிபாலனத் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனங்களினால் வனங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி நித்தமும் பரிசோதிக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், அது எந்த விதத்தில் என்பதையும்;

(iii) மேற்படி (i) மற்றும் (ii) தொடர்பாக செயற்பாடுகளின்போது வனங்களின் அழிவுக்கு ஏதுவாகும் வகையில் செயலாற்றுகின்ற நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அந்நிறுவனங்கள் மற்றும் வழங்கப்பட்ட தண்டனைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1226/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களில் தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் யாவை;

(iii) இதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) L. T. T. E. பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்கள் யாவை;

(v) மேற்படி அழிவுகள் பற்றிய மதிப்பீடொன்று செய்யப்பட்டிருப்பின், மதிப்பீட்டுப் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி அழிவுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vii) மேற்படி அனைத்தினதும் முழுமையானதோர் அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1402/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 வரவு செலவு திட்டத்தின் 169 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், கறுவா மற்றும் அது சார்ந்த ஆராய்ச்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 5 மில்லியன் நிதி ஏற்பாடு செலவிடப்பட்ட விதம் பற்றிய செலவின விபரமொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் பிரகாரம், 2016 ஆண்டில் அரசாங்க நிதி ஏற்பாட்டை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை, மேற்படி ஆராய்ச்சிகளை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்களின் பெயர்கள் மற்றும் இவற்றின் பெறுபேறுகள் பற்றிய அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) வாசனைத் திரவியங்கள் (மிளகு, கராம்பு மற்றும் சாதிக்காய்) ஏற்றுமதிக்கான செஸ் வரி நீக்கப்பட்டமையால் 2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செஸ் வரி வருமான இழப்பின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1644/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தின் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்தினதும் நிலப் பரப்பு, மக்கள் தொகை, கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) உள்ளூராட்சி நிறுவனமொன்றின் நிலப்பரப்பு பாரியதாகக் காணப்படுதல் மற்றும் மக்கள் தொகை அதிகரித்துக் காணப்படுதல் ஆகிய காரணங்களின் அடிப்படையில் பதுளை மாவட்டத்தில் புதிதாக உள்ளூராட்சி நிறுவனங்களைத் தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அவற்றில் உள்ளடங்குகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1784/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 1990 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததொரு காலத்தில் வட மாகாணத்தின் மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ் காதி நீதிபதிகளாக நியமிக்கப்பட்டிருந்தவர்கள் யாவரென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி காதி நீதிமன்ற வலயத்தில் உள்ளடங்குகின்ற கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி காதி நீதிமன்ற வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கங்கள் மற்றும் திகதிகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1805/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான புகையிரத என்ஜின்களில் தற்போது பயன்பாட்டுக்கு எடுக்கக் கூடியதான என்ஜின்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த என்ஜின்களின் வகைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் உலகத்தின் பல நாடுகளில் M2 மற்றும் M4 வகை என்ஜின்கள் நீண்ட காலம் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதையும்:

(ii) இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான அந்த வகையைச் சேர்ந்த 27 என்ஜின்களை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென்பதையும்;

(iii) அந்த என்ஜின்களின் உதிரிப் பாகங்கள் இறக்குமதி செய்யப்படுவதை நிறுத்துமாறு இரத்மலான எந்திரப் பொறியியல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இன்னும் பல வருடங்கள் சேவையில் ஈடுபடுத்தக் கூடியதான இந்த புகையிரத என்ஜின்களை பயன்பாட்டுக்கு உதவாததாக ஆக்கி அழிப்பதன் நோக்கம் யாது என்பதையும்;

(ii) இதற்கு முன்னர் புகையிரத பணியாளர்களின் எதிர்ப்பை கவனத்திற்கொள்ளாது பிரான்சிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட M9 வகையைச் சேர்ந்த 09 புகையிரத என்ஜின்களில் இன்றளவில் பயன்பாட்டுக்கு எடுக்கக் கூடியதாக 03 என்ஜின்களே உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆகவே, M2 மற்றும் M3 வகை என்ஜின்களை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா எள்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1860/ '17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் மாநகர திட்டத்தின் (Megapolis Plan) கீழ் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னோக்கியுள்ள 03 ஆண்டுகள் வரையில் இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவிற்காக திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்கனவே ஏதேனும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயின், அவை யாவை என்பதையும்;

(iii) ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டவட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

(iv) இதற்கென அரச மற்றும் தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனின், அம்முதலீடுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது ஆரம்பிக்க எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக கடன் தொகைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனின், கடன் பெற்றுக்கொள்ளப்படும் நிறுவனங்கள் மற்றும் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1956/ '17

கௌரவ கனக ஹேரத்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இத்தடவை சிறுபோகத்தின் போது கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் செய்கை மேற்கொள்ளப்பட்ட நெற்காணிகளின் ஏக்கர் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) தென் மேற்கு பருவப்பெயர்ச்சி மழை பெய்யத்தொடங்கியதும் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக மேற்கூறிய மாவட்டங்களில் அழிவடைந்த நெற்காணிகளின் ஏக்கர் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) நெற் செய்கை அழிந்ததால் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ள விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2017 நவம்பர் 17, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1227/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களில் தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் யாவை;

(iii) இதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்கள் யாவை;

(v) மேற்படி அழிவுகள் பற்றிய மதிப்பீடொன்று செய்யப்பட்டிருப்பின், மதிப்பீட்டுப் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி அழிவுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vii) மேற்படி அனைத்தினதும் முழுமையானதோர் அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1337/ '16

கௌரவ புத்திக பத்திரண,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் இஸட் புள்ளிகள் ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் ஏற்புடையதாக வெளியிடப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதன் காரணத்தினால் சில மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ளனர் என்பதையும்;

(iii) இந்த முறையியல் காரணமாக இவர்களுக்கு பாரிய அநீதி ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அநீதிக்குள்ளான மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அந்த முறையியல் யாது;

(iii) அது செயற்படுத்தப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1403/ '16

கௌரவ பந்துல குணவர்த்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 வரவு செலவுத்திட்டத்தின் 174 ஆம் முன்மொழிவின் பிரகாரம், தேசிய சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேலதிக நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 2000 மில்லியன் நிதி ஏற்பாடு 2016 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட முறையை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவின் பிரகாரம், நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்ட "மேலதிக நிகழ்ச்சித்திட்டங்கள்" யாவை என்பதையும்;

(iii) மேற்படி மேலதிக நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பொறுப்பை வகிக்கின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டில்,

(i) சுற்றாடல் சமநிலைமை பாதுகாத்தல், நிலைபேறான காணி முகாமைத்துவம்;

(ii) உயிர் வளங்களின் பாதுகாப்பு;

(iii) சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்தல்;

(iv) வன வளங்களின் பாதுகாப்பு;

ஆகியவற்றுக்கு செலவிடப்பட்ட பணத் தொகைகள் தனித்தனியே யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1645/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த ஒப்பந்தகாரர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) தற்போதைய ஊவா மாகாண சபை முதலமைச்சர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் இதுவரை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு ஒப்பந்தம் சார்பாகவும் சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மாகாண சபையினால் செலுத்தப்பட்டுள்ள பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்யும்போது மாகாண சபையினால் பின்பற்றப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1757/ '17

கௌரவ வாசுதேச நாணாயக்கார,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வ/ப லங்கா சோல்ட் கம்பனியின் பங்குகளில் 90% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) சொந்தமாகின்றதென்பதையும்; இலங்கையின் மொத்த உப்புச் சந்தையில் 60% க்கு அதிகமான தொகையை இக்கம்பனி கொண்டுள்ளதென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கம்பனியில் இருந்த 500 இற்கமைய மற்றும் நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை தற்போது 1000 ஐ கடந்துள்ளதெனினும், உப்பு உற்பத்தியில் தெளிவானதொரு அதிகரிப்பை காணமுடியவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கம்பனியில் பண்டங்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யவதற்கோ அல்லது உப்பு விற்பனைக்கோ திட்டவட்டமான கொள்கையொன்று இல்லாமையினாலும் ஊழல் மற்றும் மோசடி காரணமாகவும் தற்போது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவினால் விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அத்தியாவசிய உணவுப் பண்டமாகிய உப்பின் விலை இவ்வாறு தாங்கிக்கொள்ள இயலாத அளவிற்கு உயர்வடைவதை நிறுத்தி, நியாயமான விலைக்கு உப்பினை வழங்குவதற்கும் ஊழல் மற்றும் மோசடிகளை இல்லாதொழிப்பதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1785/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததொரு காலத்தில் வட மாகாணத்தின் வவுனியா மாவட்டத்தில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ் காதி நீதிபதிகளாக நியமிக்கப்பட்டிருந்தவர்கள் யாவரென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி காதி நீதிமன்ற வலயத்தில் உள்ளடங்குகின்ற கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி காதி நீதிமன்ற வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் மற்றும் திகதிகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1841/ '17

கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சேவா லங்கா நிறுவனம் "பசுமையை நோக்கிய" என்னும் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்ணைத் திட்டங்களை மேற்கொண்டதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பிரதேச செயலக ரீதியாக திட்டங்களின் அமைவிடத்தை வெவ்வேறாகத் தெரிவிப்பாரா என்பதையும்;

(iii) இத்திட்டங்களுக்கான செலவீட்டுத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இவை தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) அப்பிரதேசத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களுக்கு இத்திட்டத்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா

(ஆ) இன்றேல், ஏன்?

1861/ '17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப் படுத்தப்படும் மாநகர திட்டத்தின் (Megapolis Plan) கீழ் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னோக்கியுள்ள 03 ஆண்டுகள் வரையில் பாதுக்க பிரதேச செயலாளர் பிரிவிற்காக திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்கனவே ஏதேனும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயின், அவை யாவை என்பதையும்;

(iii) ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டவட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

(iv) இதற்கென அரச மற்றும் தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனின், அம்முதலீடுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது ஆரம்பிக்க எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக கடன் தொகைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனின், கடன் பெற்றுக்கொள்ளப்படும் நிறுவனங்கள் மற்றும் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2017 நவம்பர் 18, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

100/ '15

கௌரவ புத்திக பத்திரண,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சட்ட விரோதமான முறையில் படகுகள் மூலமாக அவுஸ்திரேலியா சென்றுள்ள இலங்கையர் பலர் அங்கேயுள்ள தடுப்பு முகாம்களில் உள்ளனர் என்பதையும்;

(ii) அம்மக்களுக்கு மேற்படி முகாம்களில் குறைந்தபட்ச வசதிகளேனும் இல்லை என்பதையும்;

(iii) இவர்களை மீண்டும் இந்த நாட்டுக்கு அழைத்து வர அரசாங்கம் இற்றை வரை எத்தகைய நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கிறிஸ்மஸ் தீவில், பபுவா நியுகினியாவில், அவுஸ்திரேலியாவில் மற்றும் நாகூரில் உள்ள முகாம்களில் இருக்கின்ற இலங்கையர்களின் எண்ணிக்கை பற்றி விசாரித்தறியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி முகாம்களில் இருக்கின்ற இலங்கையர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களை இந்த நாட்டுக்கு அழைத்து வர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1043/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபையின் வருடாந்த அமர்வுக்கான சனாதிபதி அவர்களின் விஜயத்தின்போது கலந்து கொண்ட தூதுக் குழுவினர் எத்தனை பேர்;

(ii) மேற்படி விஜயத்தில் கலந்து கொண்ட ஆட்களின் பெயர்கள் மற்றும் இவர்கள் தூதுக் குழுவில் உள்ளடங்கிய அடிப்படை வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி விஜயத்துக்காக அரசு, அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தச் செலவுகள் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1198/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1983 ஆண்டளவில் முல்லைத்தீவு மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை;

ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1278/ '16

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) 2015.10.01 ஆம் திகதியாகின்றபோது கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கத்திற்கு சொந்தமாகவிருந்த மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) 2016.06.11 ஆம் திகதியாகின்றபோது மேற்படி சங்கத்திற்கு சொந்தமாகவிருந்த நிலையான வைப்புக்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது மேற்படி சங்கத்திலிருந்து கடன் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளில், கடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் இற்றைவரை கடன் தொகை விடுவிக்கப்படாதுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளுக்கு செலுத்த வேண்டியுள்ள மொத்த கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளுக்கு கடன் விடுவிக்கப்பட தாமதம் ஏற்பட்டுள்ளமைக்கான காரணம் யாதென்பதையும்;

(vii) மேற்படி சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு உரியவாறு கடன் தொகையை விடுவிப்பதற்கு இயலாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(viii) ஆமெனில், மேற்படி சங்கத்தின் நிதி நிருவாகத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1388/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 142 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், உள்நாட்டு பால் உற்பத்தியின் பொருட்டு ஆகக் குறைந்த முதலீடாகிய ரூபா 25 மில்லியனுக்கு உட்பட்ட வகையில் தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கு குறைபயன்பாட்டு அரச காணிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு கருதப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவின் பிரகாரம் அரச காணிகளுக்காக விண்ணப்பித்த கம்பனிகளின் அல்லது ஆட்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு அரச காணிகள் தொடர்பான பட்டியலொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) வெளி விவசாயிகளைக் கொண்டு உயர் ஆக்கவிளைவுடனான புல் பயிரிடலுக்காக மேற்படி காணிகளிலிருந்து பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள ஏக்கர்களின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1545/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் வாழ்வின் எழுச்சி நிவாரண உதவியை பெறுகின்ற பயனாளிகளின் வீடுகளைத் திருத்திக்கொள்வதற்காக ரூபா 2,500/- தொகை அளிப்பாக வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி தொகையானது திவிநெகும சமுதாய அடிப்படையிலான வங்கிகளின் மூலம் வழங்கப்பட்டிருப்பது திறைசேரியின் மூலம் மீளளிப்புச் செய்வதன் அடிப்படையிலா என்பதையும்;

(iii) ஆமெனில், இன்றளவில் மேற்படி பணத் தொகை மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) வீடுகளைத் திருத்துவதற்காக பணம் பெற்றுக்கொண்டவர்களிடமிருந்து மேற்படி பணத் தொகை மீளஅறவிடப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1549/ '17

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கிண்ணியா, எழிலரங்கு விளையாட்டு மைதானம் கடந்த சில வருடங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றதென்பதையும்;

(ii) அதன் அபிவிருத்தி பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவென்பதையும்;

(iii) அதனூடாக செயற்படுத்தப்படுகின்ற பணிகள் யாவையென்பதையும்;

(iv) அப்பணிகள் பற்றி அங்கே இருக்கின்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் அறிந்திருக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) எழிலரங்கு விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக 2011 முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ஆண்டு வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அதன் மூலமாக செயற்படுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகள் யாவையென்பதையும்;

(iii) திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் கிழக்கு மாகாண சபை அறியாத வகையில் அமைச்சு நேரடியாகவே மேற்படி அபிவிருத்தி பணிகளை செயற்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்கின்ற ஒப்பந்தகாரர் யாரென்பதையும்;

(v) மேற்படி ஒப்பந்தகாரருக்கு வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(vi) நீண்ட காலமாகியுள்ள போதிலும், அபிவிருத்திப் பணிகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் வெளிப்படைத்தன்மை காணப்படுவதை உறுதிப்படுத்துவாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1640/ ’17

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கமத்தொழில் அமைச்சுக்குரிய திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) அந்நிறுவனங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள கட்டடங்களில் பேணப்பட்டு வருமாயின், அக்கட்டடங்களின் பெயர்கள், அக்கட்டடங்களுக்கான உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கட்டடம் சார்பாகவும் அமைச்சினால் செலுத்தப்படுகின்ற வருடாந்த வாடகை ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) அமைச்சானது கட்டடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொண்டபோது பின்பற்றிய முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 நவம்பர் 20, திங்கட்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

112/ '15

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தம்புத்தேகம வைத்தியசாலையின் சிகிச்சைக்கூடக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கையளிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அக்கட்டடத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரரின் பெயர் யாதென்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு மொத்தப் பணத்தொகையும் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், செலுத்தப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒப்பந்ததாரரின் ஏதேனும் பணத்தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கட்டடத்தின் சுவர்களில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இதனால் நோயாளிகளினதும் வைத்தியசாலையின் பணியாளர்களினதும் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இற்றைவரை இக்கட்டடம் திருத்தப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி கட்டடத்தைத் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

(iii) மேற்படி திருத்தப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரின் பெயர் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1153/'16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹோமாகம மற்றும் பண்டாரகம ஆகிய இரண்டு பிரதேச சபை ஆளுகைப் பிரதேசங்களுக்கும் சொந்தமான 98 ஏக்கர் பரப்பளவு கொண்ட பதுவில வத்த காணியில் சுற்றுலாத்துறை வீடமைப்புக் கருத்திட்டமொன்றை செயற்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இக்கருத்திட்டத்தை செயற்படுத்தும் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி யாது;

(iii) இவ்வீடமைப்புக் கருத்திட்டம் காரணமாக இப்பிரதேசத்தில் பலத்த சுற்றாடல் பாதிப்பு ஏற்படுகின்றதென்பதை அறிவாரா;

(iv) இவ்வீடமைப்புக் கருத்திட்டத்துக்கு இலங்கை முதலீட்டு சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா;

(V) இக்கருத்திட்டத்துக்கு சுற்றாடல் ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1176/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலையின் பங்கு உரிமையாளர் ஒருவராக திரு. கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இக்காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலையின் தலைவராக இவர் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வளவென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலை ஈட்டிய வருடாந்த இலாபம் ஒவ்வொரு ஆண்டு அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1199/'16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1983 ஆண்டளவில் கிளிநொச்சி மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1416/'16

கௌரவ பந்துல குணவர்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 199 ஆம் இலக்க முன்மொழிவுக்கமைவாக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கு முன்மொழியப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஏற்புடையதாக அமைகின்ற வகையில் அறிமுகம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற செலாவணி முகாமைத்துவச் சட்டத்தில் உள்ளடங்குகின்ற பிராதானமான மாற்றங்கள் யாவையென்பதையும்;

(iii) செலாவணி முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் இலங்கையின் சென்மதி நிலுவையில் மூலதனக் கணக்கினைத் திறப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) சார்க் வலயம் உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் சென்மதி நிலுவையில் மூலதனக் கணக்கினைத் திறந்துள்ள நாடுகள் யாவையென்பதையும், அந்நாடுகளில் ஏற்பட்ட வெளிநாட்டு நிதிப் பாய்ச்சல் போக்குகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

1540/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாக நீர் மூலங்கள் வற்றியமையால் உடபேருவ, அராவத்த, மக்குல் எல்ல, எகொடகம உள்ளிட்ட பதுளை மாவட்ட மக்கள் பாரிய பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா;

(ii) மேற்படி மக்களுக்கு குடிநீர் மற்றும் ஏனைய நீர் வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பார;

(ஆ) இன்றேல், ஏன்?

1595/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் தற்சமயம் இயங்கிவரும் உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்தின் ஊடாக சேவை வழங்கப்படும் மக்களின் எண்ணிக்கை, காணிப் பரப்பளவு மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மக்களுக்கு கூடுதலான வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்காக புத்தளம் மாவட்டத்தில் புதிதாக நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) இவ்வாறு முன்மொழியப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களை விரைவாக நிறுவுவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1615/ '17

கௌரவ ஹேஷான் வித்தானகே,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில், எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் எரி எண்ணெய் சார்ந்ததாக மின்சாரம் உற்பத்தி செய்யும் மின்உற்பத்தி நிலையமொன்று உள்ளது என்பதையும்;

(ii) இந்த மின்உற்பத்தி நிலையத்தின் மூலம் பலத்த சுற்றாடல் சேதம் ஏற்படுகின்றது என்பதையும்;

(iii) இந்த மின்உற்பத்தி நிலையத்துக்கான சுற்றாடல் உரிமப்பத்திரம் உரிய முறையில் வழங்கப்படுவதில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இந்த மின்உற்பத்தி நிலையம் உரித்தாயுள்ள கம்பனி யாது;

(ii) இக்கம்பனியுடன் உடன்படிக்கை செய்துகொண்டுள்ள கால எல்லை யாது;

(iii) மேற்படி சுற்றாடல் சேதத்தைக் குறைத்து பிரதேச மக்கள் வாழ்கைக்கு நிவாரணமளிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்று உள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# 2017 நவம்பர் 21, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

115/'15

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நீர்கொழும்பு கடனீரேரியை அண்டியதாக அமைந்துள்ள வன பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கண்டல் தாவர நிலப்பரப்பில் எட்டு ஏக்கர் பிரதேசத்தை வீடமைப்புக் கருத்திட்டம் உள்ளடங்கலான அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கு சுற்றாடலியலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி திட்டத்தின் பிரகாரம் குறிப்பிட்ட நிலப்பரப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள நிர்மாணிப்புகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கண்டல் தாவர நிலப்பரப்பில் நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்கு வன பாதுகாப்புத் திணைக்களத்திலிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகளுக்கான அனுமதி சம்பந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) இன்றேல், இக்கருத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை மேற்கொள்ளும் சட்ட ரீதியான முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1201/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1983 ஆண்டளவில் திருகோணமலை மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

ஆண்டு வாரியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1418/'16

கௌரவ பந்துல குணவர்தன,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவு இலக்கம் 198 இல் காட்டப்பட்டுள்ளவாறு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில்,

(i) எண்ணெய் சுத்திகரிப்பு;

(ii) புதுப்பிக்கதக்க வலுசக்தி;

(iii) ஒருங்கிணைந்த மோட்டார் வாகன உற்பத்தி;

(iv) வலயத்தின் பொருட்டு உருக்குப் பாலங்களை உற்பத்தி செய்தல்;

(v) உரம், ட்ரிபல் சுப்பர் பொசுபேற்று உற்பத்தி;

(vi) செய்மதித் தொழில்நுட்பம்;

(vii) விமானங்களுக்கான திருத்தங்கள் மற்றும் அதற்கு உதவியான செயற்பாடுகள்;

(viii) ஒருங்கிணைந்த சீனி உற்பத்தி;

ஆகிய ஒவ்வொரு துறை சார்பாகவும் இலங்கைக்குக் கிடைக்கப்பெற்ற நேரடி வெளிநாட்டு முதலீடுகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015.01.01 ஆம் திகதி உள்ளவாறு இலங்கை அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகளின் அளவு யாதென்பதையும்;

(ii) 2017.01.01 ஆம் திகதி உள்ளவாறு அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகளின் அளவு யாதென்பதையும்;

(iii) பிச் ரேட்டிங் மற்றும் மோச்சி நிறுவனங்களால் 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள சர்வதேச கடன் தரப்படுத்தல்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1511/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட வாகன விபத்துக்களின் எண்ணிக்கை மற்றும் வாகன விபத்துக்களின் காரணமாக நிகழ்ந்த மரணங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கு ஒப்பீட்டளவில், 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வாகன விபத்துக்களின் எண்ணிக்கை மற்றும் வாகன விபத்துக்களின் காரணமாக நிகழ்ந்த மரணங்களின் எண்ணிக்கை எவ்வளவு தொகையால் அதிகரித்துள்ளதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1585/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) Commonwealth Game என்ற பெயரில் இலங்கை வங்கியில் ஒரு கணக்கு பேணப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது யாரால் என்பதையும்;

(iii) அது ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) அக்கணக்கிற்கு அரச நிதி மற்றும் கொடைகள் எவ்வளவு வரவு வைக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(v) தற்போது அக்கணக்கில் சேமிப்பிலுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1620/ '17

கௌரவ ஹேஷான் விதானகே,— புத்த சாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எம்பிலிப்பிட்டிய நகரத்தில் வர்த்தக நிலையங்களைக் கொண்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களுக்காக பௌத்த அலுவல்கள் திணைக்களத்துக்கு வரி செலுத்த நேரிட்டுள்ளதென்பதை அறிவாரா;

(ii) இதற்கான வரி அறவிடப்படுவது உரிய காணிப்பகுதிக்காகவா ; இன்றேல், வர்த்தகர்கள் தமது செலவில் நிர்மாணித்துள்ள கட்டிடங்களுக்காகவா என்பதை குறிப்பிடுவாரா;

(iii) மேற்படி வரி அறவீட்டுடன் தொடர்புடையதாக, பௌத்த அலுவல்கள் ஆணையாளரினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பிப்பாரா;

(iv) இத்தகைய வர்த்தக நிலையமொன்றை வேறொரு ஆளுக்கு விற்பனை செய்யும்போது கிடைக்கும் பணத்தில் 25% ஏற்புடைய விகாரைக்கு செலுத்த வேண்டுமென பௌத்த அலுவல்கள் ஆணையாளரின் கட்டளையொன்று உள்ளதா;

(v) ஆமெனில், தமது தனிப்பட்ட பணத்தினால் நிர்மாணிக்கப்பட்ட பாரிய கட்டிடங்களுடன் தமது வர்த்தக நிலையங்களை விற்பனை செய்யும்போது இவர்களுக்கு பெரும் அநீதி ஏற்படுகின்றது என்பதை ஏற்றுக் கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1630/ ’17

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சூரிய சக்தியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்தல் தற்போது உலகத்திலுள்ள உற்பத்திச் செலவு மிகக் குறைந்த புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலமாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், சூரிய சக்தியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) 2016.09.06 ஆம் திகதி அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட “சூரிய பல சங்கிராமய” எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தற்போது தேசிய மின்சார முறைமைக்கு சேர்க்கப்பட்டுள்ள மின்சாரத்தின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1636/ ’17

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனியார்) கம்பனி (Lanka Coal Company (Pvt.) Ltd.) தாபிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்,

(ii) மேற்படி கம்பனியில் தற்போது பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி கம்பனியின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் யாவரென்பதையும்;

(iv) 2016 யூலை மாதத்திற்கு ஏற்புடையதாக மேற்படி கம்பனியின் தலைவர், பணிப்பாளர் சபை மற்றும் ஊழியர்கள் பெற்றுக்கொண்டுள்ள சம்பளம் மற்றும் அனைத்துக் கொடுப்பனவுகளும் யாதென்பதையும்;

(v) மேற்படி கம்பனி தாபிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறியுள்ளதா என்பதையும்;

(vi) நிலக்கரி கொள்வனவு செய்தல் போன்ற பாரிய தொழில்முயற்சி நடவடிக்கையொன்றை மேற்கொள்வதற்கு மேற்படி கம்பனிக்கு ஆற்றல் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 நவம்பர் 22, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

116/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிவாரி மாணவர்களுக்காக ஆரம்பப் பட்டப் பாடநெறிகளை நடாத்துகின்ற இலங்கையின் அரச பல்கலைக்கழகங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகங்களால் நடத்தப்படுகின்ற பாடநெறிகள் ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின்படி தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) தற்போது வெளிவாரி பட்டப்படிப்பிற்காக பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின்படி தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்காக இறுதியாக மாணவர்கள் பதிவு செய்யப்பட்ட திகதி ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின்படி தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மாணவர்களைப் பதிவு செய்தல் முறைசார்ந்த கால இடைவெளியின்படி மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) ஆரம்ப வெளிவாரிப் பட்டத்திற்கான மாணவர் பதிவை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1215/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் அழிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அழிவடைந்துள்ள மேற்படி சொத்துகள் பற்றி அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சொத்துகளின் மொத்த பெறுமதி யாதென்பதையும்;

(v) அழிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்து தொடர்பாகவும் பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி (i) - (vi) வரை விசாரிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1420/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் 187 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம் அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட டிஜிட்டெல் அடையாள அட்டையின் பருமட்டான வடிவமைப்பை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி அடையாள அட்டையை விநியோகிக்கும் அதிகாரி யாரென்பதையும்;

(iii) பிரசைகளுக்கு அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள செலவினம் யாதென்பதையும்;

(iv) அச்செலவினம் யாரால் ஏற்கப்படுமென்பதையும்;

(v) 2017 ஆம் ஆண்டில் டிஜிட்டெல் அடையாள அட்டை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்க வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1512/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு அரச மற்றும் அரசசார் துறைகளின் மொத்த தொழில்நிலை யாதென்பதையும்;

(ii) 2016.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு அரச மற்றும் அரசசார் துறைகளின் தொழில்நிலை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) 2016.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு அரச மற்றும் அரசசார் துறைகளின் தொழில்நிலை ஆண்/பெண் பால்நிலைக்கேற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2014.12.31 மற்றும் 2015.12.31 ஆம் திகதிக்கு ஒப்பீட்டளவில் 2016.12.31 ஆம் திகதி உள்ளவாறு அரச மற்றும் அரசசார் துறைகளின் தொழில்நிலை அதிகரித்துள்ள அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1583/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை, ருவன்புர சுனாமி வீடமைப்புத் தொகுதியில் மயுரபுர, ருவன்புர, 35 ஆம் இலக்க வீடு திரு. எஸ்.எம். சிஜாவுதீனுக்கு வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

(iii) இவர் இவ்வீட்டில் எவ்வளவு காலம் குடியிருந்தார் என்பதையும்;

(iv) தற்போது மேற்படி வீட்டில் குடியிருப்பவர் யாரென்பதையும்;

(v) மேற்படி ஆளிடமிருந்து இவ்வீடு பலவந்தமாக பறிக்கப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(vi) 2010 திசெம்பர் மாதத்தில் இது சம்பந்தமாக அம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1622/ '17

கௌரவ ஹேஷான் விதானகே,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் சீனித் தேவையைப் பூர்த்தி செய்கையில் செவனகல சீனித் தொழிற்சாலை மிக முக்கியமானது என்பதையும்;

(ii) அதன் மூலம் பெருந்தொகையான நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன என்பதையும்;

(iii) தற்போது இத்தொழிற்சாலையை சார்ந்ததாக வழங்கப்பட்டுள்ள காணிகளில் விவசாயிகள் கரும்புச் செய்கையை மேற்கொள்ளாது வேறு பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) செவனகல சீனித் தொழிற்சாலை சார்ந்ததாக கரும்புச் செய்கைக்கென விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணியின் ஹெக்டயார் பரப்பளவு எவ்வளவு;

(ii) தற்போது கரும்புச் செய்கை மேற்கொள்ளப்படுகின்ற காணியின் ஹெக்டயார் பரப்பளவு எவ்வளவு;

(iii) நாளுக்கு நாள் கரும்பு விவசாயி வேறு பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டுவருவதால் இத்தொழிற்சாலையிலிருந்து எதிர்பார்க்கப்படும் உற்பத்தியைப் பெற்றுக்காள்ள முடியாது போகலாம் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) ஆமெனில், இத்தொழிற்சாலையிலிருந்து அதிக உற்பத்தியைப் பெற்றுக் கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1632/ '17

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மின்சாரம் தொடர்பாக கேள்வி தரப்பிலான முகாமைத்துவம் (Demand Side Management) பற்றி விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மின்சாரம் தொடர்பாக கேள்வி தரப்பிலான முகாமைத்துவம் பற்றி மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டம் இற்றைவரை அடைந்துள்ள முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1641/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த சில மாதங்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியின் காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) மேற்படி வறட்சியின் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள், பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கலநல சேவை வலயங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) அவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையினால் ஏதேனும் நட்டஈடு செலுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த விவசாயிகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப்படுதலை விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் ஊடாகப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2017 நவம்பர் 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

118/ '15

கௌரவ புத்திக பத்திறன,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெஹிவளை மிருகக் காட்சிச்சாலையில் மிருகங்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான வசதிகள் குறைந்த மட்டத்தில் காணப்படுவதையும்;

(ii) மிருக வைத்தியர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதையும்;

(iii) இந்த நிலையில் மிருகங்கள் சில உயிரிழந்திருப்பதையும்;

(iv) மேலும் சில மிருகங்கள் நோய்வாய்ப்பட்டிருப்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 2013.01.01 ஆம் திகதி தொடக்கம் 2015.06.30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் உயிரிழந்த மிருகங்களின் வகைகள், வயது மற்றும் உயிரிழப்பதற்கான காரணங்கள் வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) தெஹிவளை மிருகக் காட்சிச்சாலைக்கு இணைக்கப்பட்டிருக்க வேண்டிய குறைந்தபட்ச மிருக வைத்தியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) தற்போது தெஹிவளை மிருகக் காட்சிச்சாலையில் பணியாற்றும் மிருக வைத்தியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) தெஹிவளை மிருகக் காட்சிச்சாலையில் மிருகங்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1202/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1983 ஆண்டளவில் வவுனியா மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1405/ '16

கௌரவ பந்துல குணவர்த்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2016 வரவு செலவுத்திட்டத்தின் 176 ஆம் இலக்கம் முன்மொழிவின் பிரகாரம், அலங்கார மீன்வளர்ப்புக் கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு சலுகை அடிப்படையில் கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆட்கள் அல்லது நிறுவனங்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) 1977 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அலங்கார மீன்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் ஈட்டிக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் அளவு ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் யாது என்பதையும்;

(iii) இலங்கையின் அலங்கார மீன்களை ஏற்றுமதி செய்வோரின் பெயர்ப் பட்டியலை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் பிரகாரம், அலங்கார மீன் ஏற்றுமதியாளர்களுக்கு கடன் வசதிகளை பெற்றுக் கொடுக்கும் போது விசேடமாக வழங்கப்பட்ட சலுகைகள் யாவை என்பதையும்;

(v) 2017 ஆம் ஆண்டுக்கு மேற்படி சலுகைகள் தொடர்ந்தும் செல்லுபடியாகுமா என்பதையும்;

(vi) அலங்கார மீன்களை ஏற்றுமதி செய்யும் கைத்தொழிலை மேம்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ள அரச நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக திருப்தியடைய முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1637/ '17

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் மாவட்டத்தின், பூநகரி பிரதேசத்தில் புதுப்பிக்கத்தக்க வலுசக்திப் பேட்டையொன்றை நிருமாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பேட்டையில் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் சூரிய மின்சக்தியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வலுசக்திப் பேட்டையில் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் காற்று மின்சக்தியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1642/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊவா மாகாணத்தில் காணப்படுகின்ற மொத்த பௌத்த விகாரைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் வசிக்கும் மொத்த பிக்குமார்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஏகாதிபத்தியவாதிகளின் செயற்பாடுகள் காரணமாக ஊவா மாகாணத்தின் பான்சாலை முறைமையானது பாரிய வீழ்ச்சிக்கு உள்ளாகியது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) வரலாற்று ரீதியாக ஊவா மாகாணத்திற்கு ஏற்பட்ட பாரிய அநீதியின் காரணமாக வீழ்ச்சிக்கு உள்ளாகியுள்ள பௌத்த விகாரை முறைமையை மீளக் கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1669/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சபையின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் இயங்கி வரும் உள்ளூராட்சி நிறுவனங்களால் கழிவுப் பொருட்களும் குப்பை கூளங்களும் அகற்றப்படுகின்ற இடங்கள் யாவை என்பதையும்;

(ii) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்துக்கான கருத்திட்டமொன்று மேற்படி உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மேற்படி கருத்திட்டத்திற்கென, உள்ளூராட்சி நிறுவனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கியுள்ள வசதிகள் மற்றும் பணத்தொகை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1675/ '17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2008 டிசம்பரில் மட்டக்களப்பு, கோப்பாய், கொட்டகலை ஆகிய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலிருந்து தமது பயிற்சியினை நிறைவு செய்ததன் பின்னர் வன்னி மாவட்ட பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை பயிற்சி நிறைவுபெற்றவுடன் உடனடியாக பரீட்சையை நடத்துகின்ற செயன்முறைக்கு முரணாக, 2009 ஏப்ரலில் இறுதிப் பரீட்சைக்கு தோற்றும் படி கோரப்பட்ட பயிலுநர்களின் பெயர்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) அந்த மாவட்டத்தில் நிலவிய யுத்த சூழ்நிலையின் காரணமாக அந்த பயிலுநர்களினால் அந்த மாவட்டத்திலிருந்து வெளியே வரமுடியாத நிலைமை காணப்பட்டது என்பதையும்;

(ii) இவர்கள் தமது கனிஷ்ட பிரிவினருடன் பரீட்சைக்கு தோற்றியதுடன் கனிஷ்டப் பிரிவினர் விடையளித்த அதே வினாக்களுக்கு இவர்களும் விடையளித்தனர் என்பதுடன், கனிஷ்ட பிரிவினருக்கு சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி 2009.08.01 எனவும் அதேவேளை இவர்களுக்கான சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி 2011.01.01 என மாறுபட்ட செல்லுபடியாகும் திகதிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) கனிஷ்டப் பிரிவினருக்கான சான்றிதழ் செல்லுபடியாகும் திகதியிலிருந்து இவர்களுக்கான சான்றிதழும் செல்லுபடியாகும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1693/ '17

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையின் மொத்த எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) தலைவரினதும் பணிப்பாளர் சபையினரினதும் மாதாந்த சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவரின் பெயர் யாதென்பதையும்;

(iv) மேற்படி பதவியை வகிப்பதற்கு இவர் பெற்றுள்ள கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 நவம்பர் 24, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

119/ ’15

கௌரவ புத்திக பத்திறன,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013.06.30 ஆம் திகதி தொடக்கம் 2015.06.30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஒழுக்காற்று நடவடிக்கையாக, மாணவத் தகுதி நிலை இரத்துச் செய்யப்பட்ட வகுப்புகள் தடைசெய்யப்பட்ட மற்றும் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை பல்கலைக்கழக ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) அவ்வாறான ஒவ்வொரு மாணவரினதும் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் பல்கலைக்கழக ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கக் காரணம், ஒவ்வொரு மாணவர் ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மாணவர் போராட்டங்களுக்கான தீர்வு ஒழுக்காற்று நடவடிக்கை அல்ல என்பதையும்;

(ii) மாணவர்களது கோரிக்கைகள் பற்றிக் கவனமாக செவிசாய்க்க வேண்டும் என்பதையும்;

(iii) பல்கலைக்கழகங்களில் வசதிகளை அதிகரிக்க வேண்டும் என்பதையும்;

(iv) மாணவர்களின் எதிர்கால தொழில் எதிர்பார்ப்பினை பாதுகாகக்க வேண்டும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) பல்கலைக்கழகங்களில் உருவாகும் மாணவர் போராட்டங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான நடவடிக்கைகள் ஊடாக மாணவர் போராட்டங்கள் குறைந்துள்ளனவா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1203/ ’16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1983 ஆண்டளவில் மட்டக்களப்பு மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1639/ '17

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நோபல் ரிசோசஸ் லிமிட்டட் எனும் கம்பனியினால் இலங்கை மின்சார சபைக்கு இடைக்கிடை வழங்கப்பட்டுள்ள மொத்த நிலக் கரியின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலக்கரி சார்பாக குறிப்பிட்ட கம்பனிக்குச் செலுத்தப்பட்டுள்ள மொத்த பணத் தொகை யாதென்பதையும்;

(iii) குறித்த கம்பனியானது உரிய நேரத்திற்கு நிலக்கரி வழங்குவதற்கு தவறியதன் காரணமாக நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் தொழிற்பாட்டினை இடைநிறுத்த வேண்டியேற்பட்ட காலப்பகுதி யாதென்பதையும்;

(iv) அவ்வாறு மின் பிறப்பாக்கி இயந்திரங்களின் தொழிற்பாடு இடைநிறுத்தப்பட்டதன் விளைவாக இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நோபல் ரிசோசஸ் லிமிட்டட் நிறுவனத்தினால் பெறப்பட்டுள்ள இலக்கம் LCC/09/T/02, LCC/01 மற்றும் LCC/13/T/01 கேள்விப்பத்திரங்களுக்கு ஏற்புடையதான இலங்கையின் உள்ளூர் பிரதிநிதிகள் வெவ்வேறாக யார் என்பதையும்;

(ii) பெறுகை செயல் நடைமுறையைக் கருத்திற்கொள்ளாது மேற்படி நிலக்கரி வழங்கல் குறிப்பிட்ட கம்பனிக்குப் பெற்றுக்கொடுக்கப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1646/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் உள்ள கல்விக் கோட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கல்விக் கோட்டத்தினதும் பெயர் யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கல்விக் கோட்டத்திலும் அமைந்துள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அப்பாடசாலைகள் ஒவ்வொன்றினதும் பெயர்கள் தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு பாடசாலையிலும் பணியாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு கல்விக் கோட்டத்திலும் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையானது பாடத்தின் அடிப்படையில் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(vi) அவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற கல்விக் கோட்டங்களில் ஆசிரியர் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1684/ ’17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில், பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்குகின்ற மொத்த நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்;

(iv) அதன் கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) அக் கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்கள் மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்படுகையில் உத்தியோகபூர்வமாக எல்லை நிர்ணய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பிரதேச செயலகத்துக்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது வழிநடத்தல் நடவடிக்கைகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப் படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1690/’17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000.05.05 ஆம் திகதிய 1130/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிபந்தனைகளுடனான உலக மரபுரிமை அந்தஸ்து நக்கல்ஸ் மலைத்தொடருக்கு கிடைத்ததென்பதையும்;

(ii) குறிப்பிட்ட நிபந்தனைகளிலுள்ள பிரதான நிபந்தனையின்படி, நக்கல்ஸ் மலைத்தொடருக்கு மிக அண்மையில் அமைந்துள்ள மினிப்பே, பன்வில, பாத்ததும்பர, லக்கல, வில்கமுவ, ரத்தொட்ட, உக்குவெல மற்றும் மாத்தளை ஆகிய 8 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குரிய 2000 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலப்பகுதி குறிப்பிட்ட மலைத்தொடருடன் ஒன்றிணைக்கப்படவில்லை என்பதையும்;

(iii) எனவே, நக்கல்ஸ் மலைத்தொடர் உலக மரபுரிமை அந்தஸ்திலிருந்து நீக்கப்படும் ஆபத்துக்கு உள்ளாகியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நக்கல்ஸ் மலைத்தொடர் உலக மரபுரிமை அந்தஸ்திலிருந்து நீக்கப்படுவதை தவிர்ப்பதற்காக மேலே குறிப்பட்ட 2000 ஏக்கர் நிலப்பரப்பை நக்கல்ஸ் மலைத்தொடருடன் ஒன்றிணைக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அதன் தற்போதைய நிலைமை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1695/ ’17

கௌரவ முஹமட் நவவி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் நுரைச்சோலைக் கிராமத்தில் சிறுவர் பூங்காவொன்றினை அமைப்பதற்கான அங்கீகாரத்தை புத்தளம் மாவட்டத்திலுள்ள கல்பிட்டிய பிரதேச சபை வழங்கியதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அத்தகைய சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டதா என்பதையும்;

அவர் அறிப்பாரா?

(ஆ) (i) இந்நோக்கத்திற்காக கிடைக்கப்பெற்ற நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) அந்நிதியைப் பெற்றுக்கொண்டவர் யார் என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1697/ ’17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த “கூகல் லூன்” கருத்திட்டம் தொடர்பில் கூகல் நிறுவனத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை அல்லது இணக்கப்பாட்டு ஆவணமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) இதற்காக கூகல் நிறுவனத்தை தெரிவு செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்ததன் அடிப்படை யாதென்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்திற்கென இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொடுப்பதற்கு இணங்கிய மற்றும் பெற்றுக்கொடுத்த வசதிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்காக இலங்கை அரசாங்கத்திற்கு செலவான பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) கூகல் நிறுவனம் ஆகாயத்துக்கு ஏவிய பலூன் கீழே வீழ்ந்தமைக்கான காரணம் என்னவென்பதையும்;

(vi) இது பற்றி விசாரணை நடத்தப்பட்டு அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) கூகல் நிறுவனம் இக்கருத்திட்டத்தை கைவிட்டதாக அறிவித்துள்ளதா என்பதையும்;

(viii) ஆமெனின், குறித்த உடன்படிக்கை மற்றும் இணக்கப்பாடு முறிந்தமையால் ஏற்பட்ட நிதி ரீதியான மற்றும் ஏனைய சேதங்கள் யாவை என்பதையும்;

(ix) மேற்படி சேதங்களுக்காக பொறுப்பை ஏற்க வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 நவம்பர் 25, சனிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

892/ '16

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவில், துலா வெல்லிய கிராமத்தை சார்ந்து வாழும் "வன்னி சிங்கள" என்ற இனம் பற்றி ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கிராமத்தைத் தவிர இவ்வின மக்கள் வாழும் வேறு கிராம அலுவலர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) யுத்த காலத்தில் பல்வேறு பாதிப்புக்களை சந்தித்த இம்மக்கள் வாழும் கிராமங்களில் அடிப்படை தேவைகள் குறைந்த மட்டத்தில் நிலவுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) இவ்வசதிகளை துரிதகதியில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மக்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், எவ்வாறு என்பதையும்;

(iii) இம்மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1228/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்ரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களில் தற்போது பேணல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் யாவை;

(iii) இதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்கள் யாவை;

(v) மேற்படி அழிவுகள் பற்றிய மதிப்பீடொன்று செய்யப்பட்டிருப்பின், மதிப்பீட்டுப் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி அழிவுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vii) மேற்படி அனைத்தினதும் முழுமையானதோர் அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1421/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் 189 ஆம் இலக்க பிரேரணைக்கேற்ப விசேட நோக்கங்களுக்கான கம்பனியொன்று(Special Purpose Company) நிறுவப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கம்பனி யாதென்பதையும்;

(iii) மேற்படி கம்பனியின் அமைப்பக விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கம்பனியின் அமைப்பக விதிகளில் பிரதான நியதிகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி கம்பனியின் பணிப்பாளர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1647/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சபையினால் காணி உறுதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஊவா மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் இதுவரை வழங்கியுள்ள உறுதிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) காணி உறுதிகள் வழங்கப்பட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவர்கள் வசிக்கும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(iv) இந்தக் காணி உறுதிகளை வழங்குவதற்கு ஊவா மாகாண சபை பின்பற்றிய முறையில் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1730/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உள்நாட்டலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் மூலம் பிரேரிக்கப்பட்டவாறு வாழ்க்கையில் தனது அந்திம காலத்தை கழிக்கும் கலைஞர்களுக்காக பங்களிப்பு ஓய்வூதிய முறையொன்று தற்சமயம் அமுல்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்கு பங்களிப்புச் செய்துள்ள கலைஞர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் இதற்கென ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு வருடத்திற்கு ஏற்ப தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1732/ '17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு கல்வி வலயத்தின் கீழும் காணப்படுகின்ற முஸ்லிம் பாடசாலைகளின் எண்ணிக்கையையும்;

(ii) இஸ்லாம், இஸ்லாமியக் கற்கைகள், அரபு ஆகிய கற்பித்தல்களை மேற்படி வலயங்களில் மேற்பார்வை செய்கின்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் (இஸ்லாம்) பெயர்களையும்;

(iii) உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் (இஸ்லாம்) இல்லாத கல்வி வலயங்களின் பெயர்களையும்;

(iv) இந்த கல்வி வலயங்களில் மேற்படி பாடங்கள் தொடர்பான கற்பித்தலை மேற்பார்வை செய்வதற்கு பணிக்கப்பட்ட மேற்பார்வையாளர்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை கல்வி நிர்வாக சேவை (விசேட பதவியணி - இஸ்லாம்) தொடர்பான வர்த்தானி அறிவித்தலில் இதற்கென இரண்டு வெற்றிடங்கள் மாத்திரம் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிந்ததையும்;

(ii) கலைத்திட்டத்தில் சமயப் பாடம் கட்டாயமானதென்பதையும்;

(iii) இஸ்லாம் பாடத்தை மேற்பார்வை செய்யாமல் விடுவதானது முஸ்லிம் மாணவர் களுடைய சமயக் கல்வியில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துமென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) இலங்கை கல்வி நிர்வாக சேவை (விசேட பதவியணி - இஸ்லாம்) பதவியணியில் அதிகரிப்பினை மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) இல்லையெனில், பதிற் கடமை அடிப்படையில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களை (இஸ்லாம்) நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், எப்போது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1758/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) இலங்கையர்களினால் உலகில் பல்வேறு நாடுகளிலும் பேணிவரப்படும் வங்கிக் கணக்குகள் பற்றி 2016 யூலை மாதம் 05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நான் வினாவொன்றை எழுப்பினேன் என்பதையும்;

(ii) அவ்வினாவிற்கான அனைத்து தகவல்களையும் ஆராய்ந்தறிந்து இச்சபைக்கு அறிவிப்பதாக வாக்குறுதி வழங்கப்பட்டதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) வினாவை எழுப்பி தற்போது அதிக காலம் கடந்த நிலையிலும் அதற்கான விடையை சமர்ப்பிப்பதற்கு இயலாமல் போயுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) உலகின் பல்வேறு நாடுகளிலும் இலங்கையர்களினால் பேணிவரப்படுகின்ற வங்கிக் கணக்குகள் பற்றி முழுமையான அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் ராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கை மேற்கொண்டதா என்பதையும்;

(iii) எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையாயின் அதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1980/ '17

கௌரவ அநுர சிட்னி ஜயரத்ன,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் திரியாயவில் அமைந்துள்ள, உலகத்தின் முதலாவது பௌத்த தூபியாகக் கருதப்படும் கிறிஹடு சேய புனிதபூமிக்காக ஒதுக்கப்பட்ட காணியின் நிலஅளவைப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி புனிதபூமியை பிரகடனப்படுத்துவதற்கான வர்த்தமானப் பத்திரிகை தாமதமாவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது கிறிஹடு சேய புனித பூமிக்கென ஒதுக்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது என்பதையும்;

(iv) கிறிஹடு சேய புனித பூமி அபிவிருத்திக்காக தங்கள் அமைச்சின் ஊடாக எதிர்காலத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2017 நவம்பர் 27, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

685/ '16

கௌரவ புத்திக பத்திரண,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உணவுக்காக பயன்படுத்தப்படும் முட்டை வகைகள் யாவையென்பதையும்;

(ii) அந்த முட்டைகளுக்கான வருடாந்தத் தேவையானது தனித்தனியாக சராசரி எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கை முட்டைகளை இறக்குமதி செய்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த முட்டை வகைகள் யாவையென்பதையும்;

(iii) 2016 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) முட்டைகளை இறக்குமதி செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை முட்டைகளை ஏற்றுமதி செய்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த முட்டை வகைகள் யாவையென்பதையும்;

(iii) 2016 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) 2016 ஆம் ஆண்டில் முட்டை ஏற்றுமதியின் மூலம் இலங்கை பெற்றுக்கொண்ட வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1229/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களில் தற்போது பேணல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் யாவை;

(iii) இதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்கள் யாவை;

(v) மேற்படி அழிவுகள் பற்றிய மதிப்பீடொன்று செய்யப்பட்டிருப்பின், மதிப்பீட்டுப் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி அழிவுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vii) மேற்படி அனைத்தினதும் முழுமையானதோர் அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1422/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் முன்மொழிவு இலக்கம் 191 இன் பிரகாரம், 200 ஸ்மாட் டிஜிட்டல் வகுப்பறைகள் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டில் மேற்படி 200 வகுப்பறைகளுக்காகவும் பொதுத் திறைசேரியிலிருந்து விடுவிக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) 2017 ஆம் ஆண்டில் மேலே கூறப்பட்ட 1000 வகுப்பறைகளை உருவாக்குவதன் பொருட்டு தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் பெயர்ப் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) தற்போது மிகவும் சிறந்த முறையில் டிஜிட்டல் ஸ்மாட் வகுப்பறைகள் இயங்கிவருகின்ற பாடசாலைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பாடசாலைகளில் இந்த நவீன தொழில்நுட்ப வசதிகள் சம்பந்தமாக ஆலோசனை உதவிகளை வழங்கும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1648/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்மலானை தொழிற்பயிற்சி பல்கலைக்கழகத்தில் தற்போது இயங்கும் பீடங்கள் மற்றும் திணைக்களங்கள் யாவையென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு பீடத்தினாலும் நடத்தப்படும் தொழிற்பயிற்சிப் பாடநெறிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) தற்போது இங்கு பணிபுரியும் கல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு திணைக்களத்திற்கமைய வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) இந்தப் பல்கலைக்கழகத்தில் நிலவும் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1786/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததொரு காலத்தில் வட மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ் காதி நீதிபதிகளாக நியமிக்கப்பட்டிருந்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி காதி நீதிமன்ற வலயத்தில் உள்ளடங்குகின்ற கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயல◌ாளர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி காதி நீதிமன்ற வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் மற்றும் திகதிகள் யாவையென்பதையும்; அவற்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1813/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி காணிகளை குத்தகைக்கு பெற்ற நிறுவனம், குத்தகைக்கு பெற்ற திகதி, குத்தகைக் காலம் மற்றும் குத்தகைத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி காணிகளுக்கு நிலுவை குத்தகைத் தொகைகளை செலுத்த வேண்டியுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) ஒவ்வொரு நிறுவனத்தினாலும் செலுத்த வேண்டியுள்ள நிலுவைக் குத்தகைத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1862/ '17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் மாநகர திட்டத்தின் (Megapolis Plan) கீழ் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னோக்கியுள்ள 03 ஆண்டுகள் வரையில் சீத்தாவாக்கைப் பிரதேச செயலாளர் பிரிவிற்காக திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்கனவே ஏதேனும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயின், அவை யாவை என்பதையும்;

(iii) ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டவட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

(iv) இதற்கென அரச மற்றும் தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனின், அம்முதலீடுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது ஆரம்பிக்க எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக கடன் தொகைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனின், கடன் பெற்றுக்கொள்ளப்படும் நிறுவனங்கள் மற்றும் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1992/ '17

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள் தற்போதைய கூட்டு உடன்படிக்கை விதிமுறைக்கு முரணாக "அவுட்குரோவர்" என்ற முறையை தோட்ட நிர்வாகத்தினுள் நடைமுறைப்படுத்தி வருவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையிலுள்ள பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள் யாவையென்பதையும்;

(iii) அவை சட்டத்திற்கு கீழ்ப்படிந்து அல்லது கூட்டு உடன்படிக்கைக்கு அமைய செயற்படுகின்றனவா என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் "அவுட்குரோவர்" முறை அமைச்சு மூலம் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 நவம்பர் 28, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

686/ '16

கௌரவ புத்திக பத்திரண,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) *ரஹல் தெதஸ்* நட்புறவு ஒன்றியத்தினால் மாத்தறை, கொட்டுவேகொட வர்த்தக நிலப் பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவிற்குரிய உபகரணங்கள் 2013.03.07 ஆம் திகதி இரவு காணாமல் போயுள்ளதென்பதையும்;

(ii) இதுவரை அவ்வுபகரணங்கள் கண்டுபிடிக்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இச்சம்பவம் தொடர்பாக விசாரணையொன்று நடத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) விசாரணையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1230/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களில் தற்போது பேணல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் யாவை;

(iii) இதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்கள் யாவை;

(v) மேற்படி அழிவுகள் பற்றிய மதிப்பீடொன்று செய்யப்பட்டிருப்பின், மதிப்பீட்டுப் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி அழிவுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vii) மேற்படி அனைத்தினதும் முழுமையானதோர் அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1423/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர் டிஜிட்டல்மயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்டத்தின் 193 ஆம் இலக்க பிரேரணைக்கேற்ப ஒதுக்கப்பட்ட ரூபா 10,000 மில்லியன் நிதி ஏற்பாடு 2016 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட முறையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி வரவு செலவுத்திட்ட பிரேரணையின் மூலமாக நன்மைகளை பெற்றுக்கொண்ட ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றையும் பெற்றுக்கொண்ட நிதி ஏற்பாட்டுத் தொகையையும் பற்றிய விபரமான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுதிட்ட ஒதுக்கீடாகிய ரூபா 10,000 மில்லியன் பணத்தொகையில் செலவிட முடியாமற்போன பணத்தொகை 2017 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்;

அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1649/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை சிறுபோகம் மற்றும்பெரும்போகங்களில்,

(i) நெல் விளைச்சல்;

(ii) நெல் உற்பத்தியில், நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்த அளவு;

(iii) நெல் சந்தைப்படுத்தும் சபையினால் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு நெல் விற்கப்பட்டிருப்பின், அந்த நெல்லினை கொள்வனவு செய்தவர்களின் பெயர்கள் மற்றும் நெல் கிலோவொன்றின் விற்பனை விலை;

ஆகியன ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) தற்போது நெல் சந்தைப்படுத்தும் சபை பாதுகாப்புக் கையிருப்புத் தொகையாக பேணிவரும் நெல் கையிருப்புத் தொகையின் அளவு எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1794/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990.12.31 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த காலப்பகுதியில் வட மாகாணத்தின் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் பணியாற்றிக்கொண்டிருந்த முஸ்லிம் விவாகப் பதிவாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி விவாகப் பதிவாளர் பிரிவுகளின் மூலம் உள்ளடக்கப்படுகின்ற கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி பதிவாளர் பிரிவுகள் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கங்கள் மற்றும் திகதிகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1863/ '17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் மாநகர திட்டத்தின் (Megapolis Plan) கீழ் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னோக்கியுள்ள 03 ஆண்டுகள் வரையில் கொலன்னாவைப் பிரதேச செயலாளர் பிரிவிற்காக திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்கனவே ஏதேனும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயின், அவை யாவை என்பதையும்;

(iii) ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டவட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

(iv) இதற்கென அரச மற்றும் தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனின், அம்முதலீடுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது ஆரம்பிக்க எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக கடன் தொகைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனின், கடன் பெற்றுக்கொள்ளப்படும் நிறுவனங்கள் மற்றும் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1957/ '17

கௌரவ கனக ஹேரத்,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறு குழந்தைகள் இருக்கின்ற இலங்கை பெண்களுக்கு, வீட்டுப் பணிக்காக வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த வயதெல்லை யாதென்பதையும்;

(ii) 2017/01/16 ஆம் திகதிய குடும்ப பின்னணி அறிக்கையை பெற்றுக்கொடுக்கும் சுற்றறிக்கையின் படி, மேற்படி வயதெல்லை யாதென்பதையும்;

(iii) இச்சுற்றறிக்கையின் பிடி இதற்காக கணவரின் அங்கீகாரத்தை பெற வேண்டிய தேவை நீக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி சுற்றறிக்கையின் படி அனாதரவான மற்றும் அங்கவீன பிள்ளைகள் இருக்கின்ற பெண்களுக்கு வெளிநாட்டு வீட்டுப் பணிக்கு செல்ல வாய்ப்பு கிடைத்தல் இப்பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையாதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1993/ ’17

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு விளையாட்டுத் துறை அமைச்சினால் மன்னார் மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, உப்புக்குளம், அல்பதா, கரிசல், தலைமன்னார், காட்டாஸ்பத்திரி ஆகிய விளையாட்டு மைதானங்களுக்கு ரூபா ஒரு மில்லியன் வீதம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டு விளையாட்டு மைதானத்திற்கு நிதி ஒதுக்கும் போது மன்னார் அல்-அஸார் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்திற்கு ரூபா இரண்டு மில்லியனும், மன்னார் எருக்கலம்பிட்டி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்திற்கு ரூபா மூன்று மில்லியனும், காட்டாஸ்பத்திரி விளையாயட்டு மைதானத்திற்கு ரூபா ஒரு மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) 2017 ஆம் ஆண்டு விளையாட்டு மைதானங்களுக்கு நிதி ஒதுக்கும் போது மன்னார் எருக்கலம்பிட்டி பாடசாலை விளையாட்டு மைதானத்திற்கு ரூபா 5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதன் அடிப்படை யாதென்பதையும்;

இந்த நிதி ஒதுக்கீடுகள் ஒரு குறிப்பிட்ட இனக்குழுமத்துக்கு மாத்திரம் சாதகமான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

ஆமெனில், எதிர்காலத்தில் இவ்வாறு பக்கச்சார்பாக மேற்கொள்ளப்படும் நிதி ஒதுக்கீடுகளை நிறுத்தி அனைவருக்கும் சமனாக நிதி ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2017 நவம்பர் 29, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

687/ ’16

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பொலீஸ் திணைக்களத்திடமுள்ள பாவனைக்குதவாத வாகனங்கள் தொடர்பாக தொகை மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாகனங்களின் மொத்தப் பெறுமதி யாதென்பதையும்;

(iii) இன்றேல், தொகை மதிப்பீடொன்றை மேற்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொலீஸ் திணைக்களத்திற்குரிய பாவனைக்குதவாத வாகனங்கள் இறுதியாக ஏலவிற்பனை செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அந்த ஏலவிற்பனையின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் யாதென்பதையும்;

(iii) மீண்டும் ஏலவிற்பனையொன்று நடத்தப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1231/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்ஸரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களில் தற்போது பேணல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் யாவை;

(iii) இதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்கள் யாவை;

(v) மேற்படி அழிவுகள் பற்றிய மதிப்பீடொன்று செய்யப்பட்டிருப்பின், மதிப்பீட்டுப் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி அழிவுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vii) மேற்படி அனைத்தினதும் முழுமையானதோர் அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1425/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 200 ஆம் இலக்க பிரேரணைக்கு அமைய, ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களை நவீனமயப் படுத்துவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் யாவையென்பதையும்;

(ii) எமது நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களின் முன்னேற்ற நிலைமை யாதென்பதையும்;

(iii) புதிய ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களை ஆரம்பிப்பதற்கு இலங்கை முதலீட்டுச் சபை தலையிட்டுள்ளதா என்பதையும்;

(iv) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை இலங்கை முதலீட்டுச் சபையின் செயலாற்றுகை யாதென்பதையும்;

(v) இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் யார் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1650/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த தினத்தில் நடத்தப்பட்ட பாடசாலை அதிபர் சேவையின் III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் வெளிநாட்டுப் பயிற்சிக்காக தெரிவுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) வெளிநாட்டு பயிற்சிக்காக தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) வெளிநாட்டுப் பயிற்சிக்காக தெரிவுசெய்யப்படும் போது பின்பற்றிய முறையியல் யாதென்பதையும்;

(iv) பெரும் செலவினை செய்து பரீட்சை நடத்தப்பட்டு பயிற்சியும் வழங்கப்பட்ட இவர்கள் இதுவரை மாகாண சபைகளினால் உரிய இடங்களுக்கு நியமிக்கப்படவில்லை என்பதையும்;

(v) இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1795/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990.12.31 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த காலப்பகுதியில் வட மாகாணத்தின் வவுனியா மாவட்டத்தில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் பணியாற்றிக்கொண்டிருந்த முஸ்லிம் விவாகப் பதிவாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி விவாகப் பதிவாளர் பிரிவுகளின் மூலம் உள்ளடக்கப்படுகின்ற கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி பதிவாளர் பிரிவுகள் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கங்கள் மற்றும் திகதிகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1953/ '17

கௌரவ வாசுதேச நாணாயக்கார,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2007 ஆம் ஆண்டில் சப்ரகமுவ பல்கலைகலைக் கழகத்தில் மருத்துவ பீடமொன்றை ஆரம்பிப்பதற்கு பிரேரிக்கப்பட்டு, 2010 ஆம் ஆண்டு இரத்தினபுரி பொது வைத்தியசாலையை தொடர்புபடுத்திக் கொண்டு 3 பட்டப்படிப்பு பாடநெறிகளின் கீழ் 125 மாணவர்களை அனுமதிப்பதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இதற்கேற்ப, மருத்துவ பட்டத்திற்காக 75 மாணவர்களும், தாதி பட்டத்திற்காக 25 மாணவர்களும், துணை மருத்துவ பட்டத்திற்கு 25 மாணவர்களும் என்றவாறு அனுமதிக்கப்பட உத்தேசமாயிருந்ததென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இதற்கு இரத்தினபுரி பொது வைத்தியசாலைக்கு அருகில் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாக 21 ஏக்கர் காணியொன்றும் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி திட்டம் தயாரிக்கப்பட்டு 7 வருடங்கள் கடந்த நிலையிலும் இற்றைவரை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மருத்துவ கல்வி சம்பந்தமாக தீர்க்கமானதொரு உரையாடல் நாட்டில் உருவாகி இருக்கும் இத்தருணத்தில் பல வருடங்கள் தாமதாகியிருக்கும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை உடனடியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1996/'17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணைகள் ஆணைக்குழுவிற்கு 2014 தொடக்கம் 2017 ஜூன் 30 ஆம் திகதி வரை கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை,

(i) விசாரித்து முடிக்கப்பட்ட, விசாரிக்கப்பட்டு வருகின்ற மற்றும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) வழக்குத் தொடர அல்லது சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இதுவரை சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்காத முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் அரசியல்வாதிகள் தொடர்புபட்ட வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

ஒவ்வொரு வருடங்களுக்கமைய வெவ்வேறாக யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2074/ '17

கௌரவ டக்லஸ் தேவானந்தா,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டில் திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில், வட்டமடு மற்றும் துவரங்குளம் ஆகிய கிராமங்களில் 15 க்கு மேற்பட்ட குடும்பங்கள் மீள குடியமர்த்தப்பட்டனவென்பதையும்;

(ii) அன்று தொடக்கம் இம்மக்கள் வீடுகள் அல்லது வேறு எவ்விதமான அடிப்படை வசதிகளும் இன்றி பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மக்களுக்கு தேவையான வீடுகள் மற்றும் வேறு அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2017 நவம்பர் 30, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

688/ '16

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரபல பாடசாலைகளுக்கு இடையில் நடைபெறும் வருடாந்த கிரிக்கெட் போட்டிகளுக்கு பியர் கம்பனிகள் அனுசரணை வழங்குகின்றன என்பதையும்;

(ii) அந்த போட்டிகள் நடைபெறும் போது பியர் கம்பனிகள் தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன என்பதையும்;

(iii) இதன் மூலம் பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு தூண்டப்படுகின்றார்கள் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்படுகின்ற வருடாந்த கிரிக்கெட் போட்டிகளுக்கு அனுசரணையாளர்களை தேடிக்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய முறையியல் மற்றும் பிரமாணங்கள் அமைச்சினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த முறையியல் மற்றும் பிரமாணங்கள் யாவை என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான முறையியல் மற்றும் பிரமாணங்களை சிபாரிசு செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இந்த கிரிக்கெட் போட்டிகளின் போது போதைப் பொருள் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில் அவை யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1982/ '17

கௌரவ கனக ஹேரத்,— திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த இரண்டு வருடங்களில் பயிற்றப்பட்டுள்ள பயிலுனர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) நிர்மாணிப்பு மற்றும் தொழில்நுட்பத் துறையில் பயிற்சியளிக்கப்பட்டுள்ள பயிலுனர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி எண்ணிக்கையில் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) கடந்த இரண்டு வருடங்களில் தொழில்நுட்பத் துறை மற்றும் நிர்மாணத்துறையில் பயிற்சி பெற்ற எண்ணிக்கை தொழிற்படையின் கேள்விக்குப் போதுமானதா என்பதையும்;

(V) இன்றேல், சேர்த்துக்கொள்ளப்படும் பயிலுனர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1999/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சரின் அமைச்சு அலுவலகங்களின் முகவரிகள் யாவை என்பதையும்;

(ii) அந்த அலுவலகங்களுக்காக வாடகை அல்லது குத்தகை செலுத்தப்படின் அந்த மாதாந்த வாடகை/ குத்தகை தொகை எவ்வளவென்பதையும்;

(iii) 2015 - 2017 ஆம் ஆண்டின் இதுவரை செலுத்தப்பட்டுள்ள மொத்த வாடகை/ குத்தகைத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அமைச்சரின் பிரத்தியேக பதவியணியின் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த பிரத்தியேக பதவியணிக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அமைச்சருக்காக ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

ஒவ்வொரு அமைச்சுக்கு ஏற்ப வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2075/17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கழிவுப் பொருட்களை அகற்றும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கான திட்டங்கள் மற்றும் கருத்திட்டத்திற்கு ஏற்புடைய கேள்விப்பத்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அதன்படி, இக்கருத்திட்டத்திற்காக நிதி வழங்க பிரான்ஸ் முகவராண்மை நிறுவனம் முன்வந்துள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2119/ '17

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015.01.09 ஆம் திகதியளவில் மற்றும் 2017.06.30 ஆந் திகதியளவில்,

(i) யாழ்ப்பாண மாவட்டத்தில் நிறுவப்பட்டிருந்த இலங்கை விமானப் படை முகாம்களின் எண்ணிக்கை;

(ii) அம் முகாம்களுக்கு இணைக்கப்பட்டு பணியாற்றிய உத்தியோகத்தர்கள் மற்றும் சிப்பாய்களின் மொத்த எண்ணிக்கை;

(iii) ஒவ்வொரு முகாமினதும் பெயர், அமைந்திருந்த பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் மற்றும் சிப்பாய்களின் எண்ணிக்கை;

வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015.01.09 ஆந் திகதியிலிருந்து 2017.06.30 ஆந் திகதி வரை யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து,

(i) நீக்கப்பட்ட விமானப் படை முகாம்களின் எண்ணிக்கை;

(ii) விமானப் படை முகாம்களிலிருந்து வாபஸ் பெறப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் சிப்பாய்களின் எண்ணிக்கை;

எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து விமானப் படை முகாம்கள், அவற்றில் பணியாற்றிய உத்தியோகத்தர்கள் மற்றும் சிப்பாய்களை வாபஸ் பெற்றமை தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகும் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதை அவர் இச் சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2124/ '17

கௌரவ மயந்த திசாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஈர வலயத்தில் வயல்கள் பாழடைந்துள்ளமை இலங்கையின் உணவு உற்பத்தி குறைவடைவதற்கும் மற்றும் சுற்றாடல் பிரச்சினைக்கும் காரணமாகியுள்ளது என்பதை அறிவாரா;

(ii) பாழடைந்துள்ள வயல்களில் பயிர் செய்வது தொடர்பாக அமுல்படுத்தப்பட்டுள்ள பிரேரணைகள் யாவை;

(iii) நெற் செய்கையிலிருந்து விவசாயிகள் நீங்குவதற்குக் காரணமாகியுள்ள விடயங்கள் யாவை;

(iv) அதற்காக வழங்கப்படுகின்ற தீர்வுகள் யாவை;

(v) வயல்களில் பயிர்செய்யும் பணியை மேற்கொள்வதற்காக அமைச்சின் கீழ் பிரதேச மற்றும் கிராமிய மட்டத்திலுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(vi) மேற்படி அலுவலர்கள் யாவர்;

(vii) அண்மையில் ஒரு கிராமத்திற்கு 20 வீதம் மகளிர் கமத்தொழில் அமைப்பைத் தாபித்ததன் மூலம் பாழடைந்துள்ள வயல்களில் பயிர்செய்யும் பணி நிறைவேற்றப்படுகின்றதா;

(viii) புதிய கமத்தொழில் கொள்கையில் பாழடைந்த வயல்களில் பயிர்செய்யும் வேலைத்திட்டம் உள்ளதா;

(ix) பிரதேச மட்டத்தில் கமத்தொழில் கொள்கையை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக ஒரு கமநல அபிவிருத்தி நிலையத்திற்கு பட்டதாரிகள் நான்கு பேர் வீதம் ஆட்சேர்ப்புச் செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் நிறைவேறியுள்ளதா;

(x) பட்டதாரிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2126/ '17

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின், கங்க இஹல கமநல ஆளுகைப் பிரதேசத்தின், கிரிஉல்ல விஹாரைக்கு உரித்தான ஜம்புகஹமுலதெனிய எனும் வயல் முறையான அனுமதியின்றி நிரப்பப்பட்டு தனியார் வீதியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதற்கு போலி ஆவணங்களை தயார் செய்ய அரச நிதி செலவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) கமத்தொழில் ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளருக்கான வீட்டுக்கான பிரவேசப் பாதையாகவே மேற்படி வீதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) மேற்படி வீதியின் ஆரம்பப் பகுதியும் அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(v) இந்த இடத்தில் நடைபாதையொன்றேனும் இருக்கவில்லை என்பதையும்; பிரதேச சபைக்கு உரித்தானதல்ல என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) பொது மக்களின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்துகின்ற இவ்வாறான அலுவலர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2168/ '17

கௌரவ ஷெஹான் சேமசிங்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரம் மாவட்டத்தின், மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 43 பிரபோதாகம கிராம அலுவலர் பிரிவின் நாவற்குளம் கிராமத்தில் கல் ஆலையொன்றை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ஆமெனில்,

(i) கல் ஆலையின் உரிமப்பத்திர இலக்கம் மற்றும் அது வழங்கப்பட்டுள்ள திகதி;

(ii) விண்ணப்பித்த ஆளின் பெயர் மற்றும் விண்ணப்பித்த திகதி;

(iii) மேற்படி உரிமப்பத்திரத்தை வழங்குவதற்காக சுற்றாடல் அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கல் ஆலையை ஆரம்பிக்க முன்னர் மக்களின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) மேற்படி ஆலை தொடர்பில் மக்களின் எதிர்ப்பு எழுந்துள்ளது என்பதை அறிவாரா;

(iii) இந்த ஆலை ஆரம்பிக்கப்படுவதன் மூலம் பிரதேச மக்களுக்கு ஏற்படக்கூடிய சுகாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?